தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

“ போற்றுபவர் போற்றட்டும்
புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்து என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்
வரினும்
நில்லேன்; அஞ்சேன்!”

ஆண்டு சந்தா ரூ. 6—0—0

6 மாதச் சந்தா ரூ. 3—0—0

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: ‘தென்றல்’ சென்னை-6

மலர் 1 | சென்னை | 4—6—55 | சனிக்கிழமை | இதழ் 49

பழனியாண்டவனைப் பார்க்க, பரபரக்கக் காவடி தூக்கிச் செல்லும் பக்தா! பதறுதே ‘காவடி’ என்ற தலைப்பைக் கண்டதும்.

காவடி-இது அரசியல் காவடி; வேண்டுமானால் கரடிக்காவடி என்று சொல்லலாம். பரந்த கண்ணோட்டமே முடிவேயிலாத ஓர் தத்துவமெனக் கூறிடுவோரின் சொர்க்கபூமியாம் ரஷ்யா காவடி தூக்கிச் சென்றிருக்கிறது. உலகவல்லரசுகளிலே ஒன்று என வழங்கப் படும் அப்பூபாகமா - இரு வேறு முகாம்களாக மாறியிருக்கும் உலகின் கண் கம்யூனிஸ்டு முறை நாடுகள் கூடியுள்ள முகாமின் தலைமைஸ்தானத்தை. ஏற்றிருக்கும் ரஷ்யாவா-காவடி தூக்கிச்சென்றுள்ளது என்ற ஐயம் சிலருக்கேனும் ஏற்படும்.

சென்ற மாதம் 10-ந்தேதி ரஷ்யப் பிரதமர் நிகோலாய் புல்கானின், ரஷ்ய வெளிநாட்டு இலாகா மந்திரி மாலடாவ் ஆகிய இருவரும் போலந்து தேசத் தலைநகரான வார்சாவிற்குச் சென்று ஐரோப்பாவில் ரஷ்யாவுக்கு எதிராக ராணுவம் திரட்டியுள்ள அமெரிக்கக் கோஷ்டி நாடுகளுக்கு எதிராக ரஷ்யாவும், கம்யூனிஸ்டு நாடுகளான கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் ராணுவ உடன்படிக்கை செய்வது பற்றி ஆலோசிக்க மாநாடு நடத்தியதும், 14-ந்தேதி, ரஷ்யாவின் முப்பெருந் தலைவர்களான புல்கானின், சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் முதல் காரியதரிசி க்ருஷ்சேவ், உதவிப் பிரதமர் மிக்கோயன் ஆகியவர்கள் மே மாதக் கடைசியில் யுகோஸ்லாவிய தலைநகரமான பெல்கிரேடுக்கு வருகை தர திட்டமிட்டிருப்பதாக சோவியத் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டதும், ஆஸ்ட்ரிய சமாதான ஒப்பந்தம் சம்பந்தமாக வியன்னாவில் கூடிய மேற்கு வல்லரசுப் பிரதிநிதிகள் திகைப்படைந்தனர். உலகப் பத்திரிகைகள் அனைத்தும் எந்நேரமும் பெல்கிரேடிலிருந்தும், மாஸ்கோவிலிருந்தும் நிமிடத்திற்கு நிமிடம் வெளிவந்துகொண்டிருந்த செய்திகளை ஆவலுடன் கவனித்த வண்ணமிருந்தன.

மே 15-ந்தேதி, ரஷ்ய அதிபர்கள் யுகோவில் நடத்தவிருக்கும் பேச்சு வார்த்தைகள் சமாதானத்தைப் பலப்படுத்துமென்று, யுகோ ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ கூறினார்.

உலக முக்கியத்துவம் உள்ள இந் நிகழ்ச்சியின் காலம், நடைபெறுமிடம், சூழ்நிலை ஆகிய யாவுமே குறிப்பிடத்தக்கவை. பரபரப்பான செய்தியென்று கருதிற்று - கருதுகிறது முதலாளித்துவக்கூடாரம்

இரண்டாவது உலகப்போரின் இறுதியிலிருந்து 1948-ம் ஆண்டு வரை யுகோஸ்லாவியா சோவியத் கட்சியில் அதனுடன் நெருங்கிய பிணைப்புகள் உள்ள நாடாக இருந்து வந்தது. பிறகு கருத்து மாறுபாட்டின் காரணமாகப் பிரிந்தது. பொதுவுடமைக் கொள்கைகளோடு யுகோ விளங்கினாலும், தன்னிச்சைப்படி காரியங்களைச் செய்கிறது. என்பதற்காக, ரஷ்யா 1948-ல் தொடர்பை துண்டித்துக்கொண்டது. அதனால் ரஷ்யாவின் சகாக்களில் ஒருவர் குறைந்துவிட்டதாக அமெரிக்காவும், பிரிட்டனும் கருதின. மற்ற கம்யூனிஸ்டு நாடுகள் கட்டுப்பாடாக எடுத்துக்கொண்ட பகிஷ்கார நடவடிக்கைகளின் விளைவாக அமெரிக்காவின் உதவியை யுகோ அதிபர் நாடினார்: ராணுவ தளவாடங்கள் கிடைத்தன; கோதுமை, பருத்தி; புகையிலை முதலிய சரக்குகளை அமெரிக்கா அனுப்பி வைத்தது. இம்மாதிரி ஒத்தாசையைப் பெற்றபோதிலும், அமெரிக்காவை கேந்திரமாகக் கொண்ட வடஅட்லான்டிக் ஒப்பந்தத்திலோ, ஐரோப்பிய கூட்டுப்பாதுகாப்புத்திட்டத்திலோ, யுகோஸ்லாவியா சேரவில்லை. ரஷ்யக்கட்சிக்கும் அமெரிக்கக்கட்சிக்கும் இடையே சென்ற ஏழு ஆண்டுகளாக நடந்துவரும் ‘கெடுபிடிப்போரில்’ (Cold war) யுகோஸ்லாவியா எந்தப் பக்கத்திலும் சேரவில்லை. எந்தத் தொகுதியிலும் ஐக்கியப்படாமல் இருந்துகொண்டு சுதந்திரமாக ஐ. நா. வில் செயலாற்றி வந்திருக்கிறது. அனேகமாக உலகவிவகாரங்கள் எல்லாவற்றிலும் இந்தியாவும் யுகோஸ்லாவியாவும் ஏறக்குறைய ஒரேமாதிரி தான் உலக அரங்கில் வாக்களித்தும் வந்திருக்கின்றன.

எக்கட்சியிலும் சேராமல் இருப்பது, தேசங்கள் சமாதானமாகச் சேர்ந்து வாழச் செய்வது உலக நெருக்கடியைத் தணிக்க உதவுவது என்ற பொதுஅடிப்படைகளை ஊர்ஜிதம் செய்து மார்ஷல் டிட்டோவும் இந்தியாவின் பிரதமமந்திரியும் பிப்ரவரி 23-ல் ஒரு கூட்டறிக்கை வெளியிட்டது யாவரும் அறிந்ததே.

ஸ்டாலின் இறந்தபிறகு யுகோஸ்லாவியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே இருந்து வந்த விரோத மனப்பான்மை குறைந்து, நேசம் வளரும் அறிகுறி தென்பட்டது. 1953-ல் இரு நாடுகளும் அரசியல் தூதர்களைப் பரிமாறிக்கொண்டன. ஸ்டாலினுக்குப் பிறகு பிரதமராகிய மாலங்கோவும் அவருக்குப் பிறகு பிரதமராகியிருக்கும் புல்கானினும், யுகோஸ்லாவியாவுடன் நட்பை வளர்க்கும் அறிகுறியைக் காட்டி வந்தனர். கடைசியில் நேரே யுகோஸ்லாவியா சென்று டிட்டோவுடன் பேச்சு வார்த்தை நடத்தப் போகின்றனர் என்பதைக் கேள்விப்பட்டதும் மேலைநாடுகள் பரபரப்படைந்தன. ஐரோப்பிய நாடுகளில் ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து ஆகிய இரண்டும் நடுநிலைமை வகிப்பவை. ஆஸ்ட்ரியாவும் தற்சமயம் நடுநிலைமை வகிக்கும் நாடே. ஆஸ்ட்ரியாவை அடுத்தாற் போலுள்ள நாடான சின்னஞ்சிறு யுகோஸ்லாவியா செய்யும் எந்த முடிவும் விசேஷ முக்கியத்துவம் பெறக் கூடியது. சமீபகால சர்வதேச அரங்கில் நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சிகள் காரணமாகவும், இயற்கையில் அமைந்துள்ள அதன் இருப்பிடம் காரணமாகவும் யுகோஸ்லாவியாவின் மகத்துவம் அதிகரித்துவிட்டது. இருந்தபோதிலும் பெரிய நாடான ரஷ்யா அச்சிறு நாடு நோக்கிக் காவடி தூக்கிச் செல்வதேன்?

ராணுவ வகையில் இல்லாவிட்டாலும், ராஜீய வகையில் யுகோஸ்லாவியாவைத் தனக்குச் சாதகமாகத் திருப்பிவிட அமெரிக்கா பெருமுயற்சி செய்வது சாத்தியமே. காலமெல்லாம் நடுநிலைமைக் கொள்கை வகிப்பதற்காக வென்றே ஒரு சின்னஞ்சிறு நாட்டிற்கு முதலாளித்துவக் கூடாரம் ஒத்தாசை செய்துகொண்டிருக்காது என்பது பிரத்தியட்சம்.

யுகோஸ்லாவியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள உறவுநிலையைப் பற்றிக் குறிப்பிடுகையில், அதில் ராணுவப் பிணைப்பு எதுவும் இல்லை என்று எடுத்துக்காட்டப் பட்டது. ஆனால் மற்றொரு சர்வதேச பந்தம் இருக்கிறது. அடுத்தாற் போலுள்ள கிரீஸ், துருக்கி ஆகிய இரண்டுடனும் சென்ற ஆண்டு ஆகஸ்டுமாதத்தில் யுகோஸ்லாவியா ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. கிரீஸும், துருக்கியும், அமெரிக்காவுடன் ராணுவவகையில் பிணைக்கப்பட்டவை. தமது சுதந்திரத்திற்கு அல்லது சமாதானத்திற்குப் பங்கம் வரும்போல தோன்றினால், இவ்விரண்டு களும் யுகோஸ்லாவியாவும் பேசி, நமது நலனைப் பா வழி காண்பது என்றுதான் மூலம் ஒப்புக்கொள்ளப் கிறது. எனவே, ராணு எதுவும் ‘இல்லை அமெரிக்கத் தி சாய்ந்திருப்ப தால், கிர எல்லாக் யும் ஒ சே

சூட்டுடன் சூடாக, வரட்டு ஜம்பம் பாராட்டாமல், வெறும் வீறுப்பு கொள்ளாமல் யுகோவை முன்னர் புறக்கணித்த ரஷ்யத்தலைவர்கள் தாமே காவடி யெடுத்துச் சென்றனர் பெல்கிரேடுக்கு. மேற்கு ஜர்மனியை வடஅட்லாண்டிக் ஒப்பந்தத்தில் அமெரிக்கா சேர்த்தின் நேரடியான விளைவுதான் வார்சா மாநாடு. ஆனால் உலகப் பிரச்சினைகள்மீது உடன்பாடு ஏற்பட்டால் இந்த ஐக்கியம் கலைந்துவிடுமென்று ரஷ்யப்பிரதமர் கூறியுள்ளார். இது மேல்நாட்டு ராஜதந்திரிகளை வம்புக்கழைக்கும் செயலேயன்றி வேறில்லை.

வார்சாவில் கூடி நிறுவப்பட்ட கம்யூனிஸ்ட் நாடுகளின் ராணுவக் கூட்டில் யுகோஸ்லாவியாஇப்போது இல்லையென்றாலும், சீக்கிரத்தில் சேர்ந்துவிடுமா என்பதும் தெரியவில்லை. புல்கானினும் அவர்தம் தோழர்களும் நிச்சயம் அக்கூட்டில் சேரும்படி டிட்டோவிற்கு சாம, தான, பேதம் ஆகிய மும்முறைகளையும் பிரயோகித்துக் கேட்டிருப்பர் என்பதை மட்டும் உறுதியாக நம்பலாம்.

ரஷ்ய கோஷ்டியினருக்கும், யுகோஸ்லாவியத் தலைவர்களுக்குமிடையே சம்பாஷணைகள் ஆரம்பமாகி மே மாதம் 29-ந் தேதி வரை மூன்று முறைதான் இருதரப்பினரும் கூடிப் பேசினர். அதற்குள் தங்கள் இரு நாடுகளின் உறவுபற்றி அவர்களிடையே கொள்கையளவில் உடன்பாடு ஏற்பட்டுவிட்டது. கொள்கை சம்பந்தமான வேற்றுமைகளைத் தள்ளி வைத்துவிட்டு இரு கோஷ்டியினரும் இந்தியா-யுகோ, யுகோ-பர்மா கூட்டுப் பிரகடனங்களை அனுசரித்து உடன்பாட்டுக்கான பொது அம்சங்களைக் கண்டுபிடிக்க முயற்சித்தனரென்றும், ஐ. நா. விஷயத்தில் ஒரு திட்டமான போக்கு, சகல விதமான ஆக்கிரமிப்புக்களையும் விஸ்தரிப்புக்களையும் கண்டிப்பது, நாடுகளின் சமத்துவத்தையும் ஐக்கியப் பாட்டையும் அங்கீகரிப்பது, மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது ஆகிய விஷயங்கள் குறித்து இரு தரப்பினரும் விவாதித்தனரென்றும் பத்திரிகைச் செய்திகள் அறிவிக்கின்றன.

மே 27-ந் தேதியன்று யுகோ-சோவியத் மாநாடு டிட்டோ தலைமையில் துவங்கிற்று. மாநாடு ஆரம்பமாகுமுன் ரஷ்யத்தலைவர்கள் போரில் உயிர்நீத்தவர்களின் கல்லறைக்குச் சென்று மரியாதை மாலை போட்டனர்.

''தினமணி'', ரஷ்யத்தலைவர்கள் யுகோஸ்லாவியா செல்ல முடிவு செய்துள்ளனரென்றசெய்தி தெரிந்ததும் இட்டிய தலையங்கத்தில் ''தங்கள் கட்சியில் சேராவிட்டாலும், எந்த சந்தர்ப்பத்திலும் யுகோ 'நடுநிலைமை' நாடாகவே இருக்கவேண்டும் என்று உறுதி ...க அவர்கள் போவதாயிருக்க ...ம். இரண்டாவது உலக யுத்தத் ... ஜெர்மன் ஆக்கிரமிப்பினால் ...ந கஷ்ட நஷ்டமடைந்த ...ில் யுகோவும் ஒன்று. ... மறுபடி அதனால் அபாயம் ...க்கச்செய்வதில் மார்ஷல் ...க்கு அக்கறை உண்டு'' ...ப்பிட்டது. இந்த ஹேஷ் ...த்தமானதாக இல்லை ...்றிரண்டு பின்சம்பவங் ...து. 'சமாதானம்- ...னத்திற்காக ...தா கோ ...ல் கானின் அச்சு ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சவேண்டியுளது. மூன்றுவது உலகப்போர் தொடங்கினாலும் தொடங்காவிட்டாலும் கெடுபிடிப்போரி'ல் தமது பங்கைச் செலுத்த யுகோவும் இந்தியாவும் முனைந்து விட்டனவோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. அது மட்டுமல்லாமல், நடுநிலைமை வகிக்கவேண்டுமென்று யுகோவைக் கேட்டுக்கொள்ள வேண்டிய அவசியத்தில் நிலைமையில்லை. பிப்ரவரி 23-ந் தேதி கூட்டறிக்கையிலே நேருவும், டிட்டோவும் 'எக்கட்சியிலும், சேராமலிருப்பது' என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

1948-ல் ரஷ்யாவுக்கும் யுகோஸ்லாவியாவுக்கும் இடையே உறவு முறிந்துபோனதற்கு ரஷ்ய ரகசிய போலீஸ் இலாகா மந்திரி பெரியாவே காரணமென்று க்ருஷ்சேவ் மே 26-ல் பிரசங்கமொன்றில் குறிப்பிட்டார். இது தேவையிலாத விளக்கம். இது உண்மையில் நடந்ததா அல்லது கட்டுக்கதையா என்பதைத் தீர்மானிக்க இப்போது பெரியா உயிருடன் இல்லை. வேண்டுமென்றே யுகோஸ்லாவியாவை கம்யூனிஸ்ட் அகிலத்திற்குள் இழுக்கும் எண்ணத்தால் கூறப்பட்டது என்று நினைக்க இடமிருக்கிறது. ''பெரியா தூக்கிலிடப் பட்டுவிட்டார். அவரால் தான் நம்மிரு நாடுகளிடையே இருந்துவந்தஉறவு.ரத்தாகிவிட்டது அவர் மறைவால் மனத்திலே உள்ள விரோத மனப்பான்மை களைந்தெறியப்பட வேண்டும். நாம் நெருங்கிய நேசர்களாகவேண்டும்,'' என்று மறைமுகமாகக் கூறுவதாகவே க்ருஷ்சேவ் பிரசங்கத்தின் மூலம் அறியப்படுகின்றது.

பெல்கிரேடு மாநாட்டை யொட்டி நேருவுக்கு 'ராஜ வரவேற்பு' அளிக்க மாஸ்கோவில் எற்பாடு நடைபெற்று வருவதை இந்நாட்டுப் பத்திரிகைகள் சந்தோஷ ஓலமிட்டுக் கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கின்றன. நேருவை சரியாகக் கணக்கிட்டு வைத்துள்ளன கம்யூனிஸ்டு தேவதைகள். முன்பு பெரிய வரவேற்பு அமெரிக்காவில் அளிக்கப்பட்டபோது நேரு அமெரிக்காவின் செல்லப்பிள்ளையானார். அமெரிக்கா நேருவை மட்டும் செல்லப்பிள்ளையாகக் கருதவில்லை. பாக்கிஸ்தானின் லியாகத் அலிகானையும் ஈரான் தேசத்து ஷாவையும் பிறரையும் அவ்வாறு கருதவே, கருதி அவ்வித உபகார வேடிக்கை செய்து காட்டவே நேரு அமெரிக்காவின் தொடர்பிலிருந்து தன்னை மெள்ள மெள்ள விடுவித்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடலானார்.இப்போது அழைத்தவுடனே நேரு செல்கிறார் மாஸ்கோவுக்கு. டிட்டோவிடம் காவடி எடுத்துச்சென்ற ரஷ்யா அக்காவடியை அங்கேயே விட்டு வைக்காமல் இந்தியாவிற்கும் எடுத்துவரும் சந்தர்ப்பத்திற்குக் காத்திருக்கலாம் நேரு. 'அவசரக் கோலத்தில் அள்ளித்தெளிக்கும்' பண்பினரல்லவா நேரு.'அவ்வளவு பெரிய மனுஷன் கையைப் பிடித்திழுக்கும்போது எப்படி மறுப்பது' என்று கூறினாலுமே ஒரு பதிவிரதை. அவளை சர்வதேச அரசியல் அரங்கில் ஒத்து இருக்கின்றார் இந்தியாவின் பிரதம மந்திரி.

ஜூன் 5-ந் தேதியன்று மாஸ்கோ நோக்கி இந்தியாவை விட்டுச் செல்லும் நேருவுக்கு மாஸ்கோவில் ராஜ வரவேற்பு அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது வரையில் மாஸ்கோவில் இத்தகைய ராஜ வரவேற்பு வேறு எவருக்கும் கிடைத்திருக்கமுடியாது என்று கூறப்படுகிறது.

சோவியத் ரஷ்யாவின் பிரதம தலைவர்களின் அழைப்புக்கு இணங்கவே பிரதம மந்திரி நேரு ரஷ்யாவில் 15 தினங்கள் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

நேரு சோவியத் தலைவர்களுடன் விவாதிப்பதற்கு எந்தக் குறிப்பிட்ட விஷயங்களையும் கொண்டு வருவதாகத் தெரியவில்லையென்றும், எனினும் உலக விவகாரங்கள் எல்லாவற்றையும் பற்றி அவர் பேசக்கூடும் என்றும் மாஸ்கோவில் உள்ள இந்திய ஸ்தானிகரான கே. பி. மேனன் மே 30-ந் தேதி ராஜதந்திர பாஷையில் கூறினார்.

''கையெழுத்துப் போடு என்ற இடத்தில் கையெழுத்திட'' தயாராயிருக்கும் நேருவிடம் பேச விஷயத்தை முன்கூட்டியே குறிப்பிட வேண்டியதில்லையல்லவா ? அவருக்கு வேண்டியது ஆடம்பர வரவேற்பு, புகழ்மாலை;ராஜோபசாரம்.

இதற்கிடையில்,யு. எஸ். விமானிகளை சிறை விடுவிப்பதற்குப் பிரதம மந்திரி நேரு தீவிர முயற்சி எடுத்துக்கொண்டதற்கு யு.எஸ்.ராஜாங்க மந்திரி டல்லஸ் நன்றி தெரிவித்து மே 30-ந் தேதி நேருவுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறாரென்று பத்திரிகை செய்தியொன்று கூறுகிறது. இது நேருவுக்கு இக்கட்டான நிலை தான். புகழ்மாலை அணிவித்த டல்லஸ் பக்கம் சாய்வதா, ராஜ வரவேற்புத்தரவிருக்கும் க்ருஷ்சேவ் பக்கம் சேர்வதா என்ற தர்க்கத்தில் அவர் இரவெல்லாம் கண்விழித்திருக்க நேரினும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பெல்கிரேடு மாநாட்டில் நடந்த பேச்சு வார்த்தைகளின்மீது புல்கானினும் அவர்தம் தோழர்களும் நேருவுடன் சம்பாஷிப்பார்களென்று கருதலாம். பெல்கிரேடில் மனக்கசப்பு சிறிதேனும் இருக்கும்பட்சத்தில் ரஷ்யாவின் சார்பில் நேரு டிட்டோவிடம் காடிக் காவடியைத் தூக்கிச்செல்லக்கூடும். சம்பவங்கள் எப்படி முடிந்தாலும் ரஷ்யா யுகோவுக்குக் காவடி தூக்கிச்சென்றதின் பயனாய் உள்நாட்டில் மார்ஷல் டிட்டோவிற்கு செல்வாக்குப் பன்மடங்காக உயரும் என்பதில் மட்டும் ஐயமில்லை. கம்யூனிஸ்டு அகிலத்தில் அவர் சேராத வரை கம்யூனிஸ்டு ராணுவக்கூட்டில் கலந்துவிடாத வரை ! வெளிநாடுகளிலும் அவர் சிறந்த ராஜதந்திரி என்று கருதப்படுவார்.

தென்றல்

ஜூன் 18உ இதழில்

★

'ராஜ தண்டனை'

கண்ணதாசன்

எழுதும்

காதற் சித்திரம்

★

அவள்

இன்பவல்லி ! இசையரசி ! இடுக்கண் விளைவிப்போரின் துடுக்கை அடக்கும் வீரமன்னனின் வாரிசுக்கோர் திருவிளக்கு !

அவன்

கவிக்குயில் ! புவியாண்ட புரவலர்களின் புகழுரை பெற்ற புரட்சிப்புலவன் ! கற்றவர்க்குக் கனிரசம்;மற்றவர்க்கு கடுவிஷம்.

அவர்கள்

காதல் கானம் இசைக்கும் வானம்பாடிகளயினர். வழியிலே, வான வெளியிலே கழுகுகள் வழிமறிக்கின்றன.

முடிவு ?

மறவாதீர் ஜூன் 18,

தென்றல் இதழில் !

எண்ணம்

கண்ணதாசன்

உலகம் முழுவதும் கூறும் ஒரு வார்த்தை 'ஜனநாயகம்' என்பது. எந்தக் கோணத்தில் ஆட்சி நடத்தினாலும் சரி, உலக நாடுகளின் அரசினர், தங்கள் ஆட்சிமுறையை ஜனநாயகம் என்கிற வார்த்தையோடு சேர்த்துப் பிசைந்துதான் பேசுகிறார்கள். சுதந்திரம் பெற்ற பிறகு அதலபாதாளப் பொருளாதார நிலைக்குச் சென்றுவிட்டிருக்கும் இந்திய உபகண்டத்து அரசினரும், அவர்களுக்கு யோந் தட்டும் காங்கிரஸ்காரர்களுங்கூட தங்கள் ஆட்சிக்கு ஜனநாயகமுத்திரை போட்டுத்தான் தமுக்கடிக்கிறார்கள். இப்படி வேறு வேறு பாதைகளிலே பயணம்போகும் பல நாடுகளும் தங்கள் முறைதான் ஜனநாயகம் என்பதால், அந்த வார்த்தையின் உண்மைப்பொருளையோ, அதற்கு இலக்கணமான ஒரு நாட்டையோ சராசரி மனிதன் முழுக்கக் காணமுடியாமல் போய்விட்டது! எந்தக் காரியத்துக்கும் ஜனநாயக முத்திரை போட்டாலும், "சரி, இதுவும் ஜனநாயகத்தில் ஒரு அம்சந்தான் போலும்!" என்றே சராசரி மனிதன் நினைக்கிறான். திராவிட நாட்டைப் பொறுத்த வரையில், துப்பாக்கிப் பிரயோகம்கூட ஜனநாயகம் என்ற கூறப்பட்டு மக்களை மயங்க வைத்திருக்கிறது!

இந்த நேரத்தில் - சூழ்நிலையில் - தான் ஜனநாயகம் என்றால் என்ன என்பதை செயல்மூலம் வெளிப்படுத்திற்று திராவிட முன்னேற்றக் கழகம். அது நடத்திய பொதுச் செயலாளர் தேர்வு, இந்திய உபகண்டத்திலுள்ள மற்ற கட்சிகளின் கண்களை அதன் பக்கம் திருப்பிவிட்டிருக்கிறது. அதோடு இன்னொரு வியக்கத்தக்க செயலையும் வரப்போகும் மாநில மாநாட்டில், புதிய பொதுச் செயலாளரின் அனுமதியைப் பெற்று அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவர ஆசைப்படுகிறார்கள். அந்த ஆசையை பொதுச் செயலாளரின் முன்னிலையில், கோகலே ஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டார்கள். அதாவது, "தி. மு கழகம் தேர்தலில் கலந்து கொள்ளலாமா கூடாதா" என்பதை அறிய, மாநில மாநாட்டில், தோழர்கள் அனைவருக்கும் வோட்டுச் சீட்டுக் கொடுத்து வோட்டுப் போடச் சொல்லவேண்டுமென்று கூறினார்கள். கலந்துகொள்ளலாமா கூடாதா என்பது ஒரு கேள்வி. தி. கழகத்தோடு சேர்ந்து தேர்தல் வேண்டுமா - சேராமல் வேண்டுமா. என்றொரு கேள்வி இந்தப் பதிலைப் பார்த்து, அதனை வைத்துத் தீர்மானம்கொண்டுவருவதே அண்ணா அவர்களின் கருத்தாயிருக்கலாம். எப்படியோ, அண்ணா அவர்கள் வெளியிட்ட கருத்து, ஜனநாயக சரித்திரம் காணாத அம்சமாகும்! அந்த அளவுக்கு உயர்ந்த ஜனநாயகத்தை இன்னும் உலகத்துக் கட்சிகள் ஏதும் பரிட்சித்துப் பார்க்கவில்லை. "நிர்வாகக் கமிட்டி கூடிற்று; முடிவு செய்தது" என்று கூறி, பிறகு தமுக்குப் போட மட்டுமே சாதாரணமக்களை அழைப்பது வழக்கம். அதுவும் ஜனநாயக முறைதான் என்றாலும், மக்கள் மன்றத்தின் முழுக்குரலையும் பகுதி பிரித்து அறிந்து செயல்படுவது போல் அது உயர்ந்ததாகாது.

"பிரதிநிதித்துவம் எடுத்த முடிவு - பிரதியொரு மனிதனும் கட்டிய முடிவு" இந்த இரண்டிலும் பின் முடிவேபொதுமக்களின்கருத்தை இழுத்து, அவர்கள், தங்களுக்கும் அதிகாரமிருப்பதை உணரச் செய்யும்முடிவாகும். தலைவர்களின் தனிப்பட்ட எண்ணம் என்று ஒன்று இருந்து, அதற்கு நேர்விரோதமாக தேர்தல் முடிந்துவிடலாம். அப்போது, தலைவர்களின் ஆசைக்கும் நினைவுக்கும் இடமின்றிப் போய் விடலாம். ஆனாலும், 'மக்கள் குரலை மகேசன் குர'லாகக் கருதிச் செய்யப்பட்ட முடிவு தலைவர்களுக்குப் பெருமையே தரும். உதாரணமாக அண்ணாவுக்கு, தேர்தலில் கலந்துகொள்ள வேண்டாம் என்ற ஆசை இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். பொதுமக்களின் வோட்டு, கலந்துகொள்ள வேண்டுமென்று முடிவாகிவிட்டதாக வைத்துக் கொள்ளுங்கள். இது அண்ணாவை அவமதித்ததாகாது. மாறாக அவருக்குப் பெருமையாகும். அடடா! நாம் வளர்த்த இயக்கம், ஜனநாயகத்தில் மிஞ்சிவிட்டது என்ற மகிழ்ச்சியே அடைவார்.

நிர்ப்பந்தம், இதில் எட்டுணையும் இல்லை. இந்த முறை மூலம், நாளைக்கு நாம் தேர்தலில் கலந்து கொள்ளும் முடிவு ஏற்பட்டால், பார் பார் என்று தூற்றத் தயாராயிருப்போர் அடிப்பட்டுப் போவார்கள். நிரந்தரக் கழகத்தின் நிரந்தரத்தலைவருக்கு நியமனப் பொதுச் செயலாளராயிருக்கும் அவசரச்சாமிகள் இந்தத் தேர்தல் முடிவுகண்டு வெட்கித் தலைகுனிவார்கள். வேண்டும் என்றாலும் சரி, வேண்டாம் என்றாலும் சரி இரண்டையுமே மனங்கனிந்து மகிழ்வோடு ஏற்றுக் கொள்வார்கள், நம் தலைவர்கள்.

ஜனநாயகத்தின் உச்சி மாளிகையை நோக்கிச்செல்லும் வழியில் இரண்டாவது பெரும் படிக்கட்டு இது. இதனை நல்ல முறையில் கடப்போம்-வெற்றி பெறுவோம்!

கண்ணதாசன் இலங்கை பயணம்

ஆசிரியர் கண்ணதாசன், இலங்கை, மட்டக்களப்பு தமிழ் வாலிபர் சங்க ஆண்டு விழாவில் கலந்துகொள்வதற்கு, சென்னையிலிருந்து 10-6-55 ல் விமானம்மூலம் புறப்படுவார்.

இலங்கையின் மற்ற பகுதிகளிலிருந்து தங்கள் ஊர்களுக்கு வரும்படி எழுதியுள்ள தோழர்கள் தயவு செய்து கொழும்பு தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. அதிமணி அவர்களுக்கு எழுதி கூட்ட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துகொள்ளவும். நேரடியாக ஏற்பாடு செய்வதற்கு இயலாதிருப்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி
"தென்றல்"

ஏஜண்டுத் தோழர்கள் முக்கியமாகக் கவனிக்க

தென்றல் கன்சர்ன்ஸ் ஏஜண்டுகளிலே பெரும்பாலோர் மிகவும் நாணயத்தோடு நடந்துகொள்வதற்கு முதலில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். மீதிச் சிலரிலே ஒரு சிலர் இன்னும் பில் பாக்கியை அனுப்பாதிருப்பதற்கு வருந்துகிறோம். உடனே அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

ஜூன் 18-ந் தேதி 'தென்றலு'க்கு இரண்டாவது ஆண்டு ஆரம்பம். அந்த இதழிலிருந்து கண்ணதாசனின் "ராஜ தண்டனை" ஈ. வி. கே. சம்பத்தின் "வாழ்வ தெப்படியோ?" காரைமுத்துப் புலவரின் "மனித மனம்" முதலியன தொடர இருக்கின்றன. அழகிய வர்ண முகப்போடு 'தென்றல்' வரவிருக்கிறது. கண்டிப்பாகக் குறித்த காலம் தவறாது அதுமுதல் வெளிவரும். ஆகவே, ஏஜண்டுத் தோழர்கள் ஒரு கார்டில் தங்களுக்குத் தேவையான பிரதிகளின் எண்ணிக்கையைக் கொட்டை எழுத்திலும், தங்களுக்குப் பத்திரிகை அனுப்பப்பட வேண்டிய சரியான விலாசத்தை ஒழுங்காகவும் எழுதியனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். விளம்பரப் போஸ்டர்கள் சில தினங்களில் அனுப்பிவைக்கப்படும். ஏஜண்டுத் தோழர்கள் உடனே கடிதம் எழுதக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஜூன் 18-ந் தேதியிலிருந்து நான்கு இதழ்கள் வரை வாபஸ் எடுத்துக்கொள்ளப்படும். அதற்குப் பிறகு தங்களுக்குத் தேவையான அளவுக்குப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த நான்கு வாரச் சலுகையில் நிறையப் பிரதிகளை ஏஜண்டுகள் விற்பனை செய்தால் தொடர் நாடகம் படிக்கும் நண்பர்கள் நமது நிரந்தர வாசகர்களாகி விடுவார்கள். இதை ஏஜண்டுத் தோழர்கள் கவனிக்க!

முக்கியமாக 10-6-55 க்குள் ஏஜண்டுத் தோழர்கள் முழுப் பாக்கியையும் அனுப்பாவிட்டால் தயவு தாட்சண்யமின்றி அவர்களுக்கு பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்படும். ஏஜண்டுகள் எழுதும் கடிதங்கள் நிர்வாகி, தென்றல் கன்சர்ன்ஸ் என்ற விலாசத்திற்கே எழுதப்பட வேண்டும். அப்படியானால்தான் சீக்கிரம் பதில் கிடைக்கும். ஜூன் 18-ந்தேதி, தென்றலின் பாதையில் ஒரு நல்ல கட்டத்தைத் துவங்கப்போகிறது. ஒத்துழைக்குமாறு ஏஜண்டுத் தோழர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிர்வாகி

மாநில மாநாட்டு நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம்

★

5-6-55 ஞாயிறு காலை 9-மணிக்கு

கோகலே மன்றத்தில்

நடிப்புப்புலவர்

கே. ஆர். ராமசாமி

அவர்கள் தலைமையில்

சொல்லின்செல்வர்

ஈ. வி. கே. சம்பத்

"மக்களும் ஆட்சியும்" என்ற தலைப்பில் பேசுவார்.

நன்கொடை ரூ. 1 அணா 8

சென்னை மாவ

சிலம்பு தந்த செல்வம்

பெருங்கதையும் முத்தொள்ளாயிரமும்

சிலப்பதிகாரத்தின் தனிப் பண்புகளைப் பிரித்தெடுத்து உணர்த்துவதானால், அதனுடன் நெருங்கிய உறவுடைய இரு நூல்களின் பண்புகளை ஒருங்கு இணைத்துக் காண வேண்டும். ஒன்று தமிழ்க் கொங்குவேள் மாக்கதை என்ற பெருங்கதை. மற்றொன்று முத்தொள்ளாயிரம். இரண்டும் நமக்கு முழு நூல்களாகக் கிட்டவில்லை-இரண்டும் அரைகுறைகளே. ஆனால் கம்பர் காவியம், சிந்தாமணி ஆகிய முழு நூல்களில் காணப்பெறும் 'முழுமை'யை விட இத்துண்டு நூல்களில் காணப்படும் 'முழுமை' முனைப்புடையதே. பெருங்கதையில் சொல்வளம், வருணனைச் சிறப்பு, பார காவியப் பண்பாகிய வீறுடைமை ஆகிய கூறுகளைக் காணலாம். இவை திருமலை நாயக்கன் மஹாலைக் காண்பவர் உள்ளத்தில் ஏற்படும் கம்பீர உணர்ச்சியை நமக்குத் தருவன. ஆனால் முத்தொள்ளாயிரத்தில் இயற்கை எளிமை, ஷெல்லி, கீட்ஸ் போன்ற ஆங்கிலக் கவிஞரின் மென்மை, தேனினிமை ஆகியவற்றைக் காண்கிறோம். அதன் விழுமிய ஓசை நயத்தில் நாம் பண்டைத் தமிழகத்தின் மறைந்த மாயக் கவிதைக் கலையின் மருமத்தை ஓரளவு நுகர்கிறோம். 'வெண்பாவில் புகழேந்தி' என்ற இடைக் காலப் பழமொழியைப் பொய்யாக்கும் மாய வெண்பா இசை இங்கே நம் கருத்தைக் கவருகிறது.

பெருங்கதை முத்தொள்ளாயிரம் ஆகிய இரண்டு நூல்களின் சிறப்புக் கலையும் ஒருங்கே கொண்ட--பார காவியப் பண்புடன் யாழிசையையும் இழையவிட்ட கலைச்செல்வம் சிலப்பதிகாரம்.

சிலம்பு நாடகமும் கம்ப நாடகமும்

ஆனால் சிலப்பதிகாரம் காவியமல்ல, நாடகம். அதன் மீஉயர் சிறப்பு இதுதான். அது நாடகக் காப்பியம் கூட அல்ல. காவியத்தில் நாடகச் சுவை எழப் பாடப்படுவதே நாடகக் காப்பியம். இத்தகைய சுவை தமிழகத்தில் சிலப்பதிகார காலத்திலிருந்து கம்பர் காலம் நீடித்திருந்தது. கூர்ந்து)ப்பவர் அச்சுவையைக் கம்ப பனத்தில் கூடக் காணலாம். சுவை அழிந்துபட்ட தமி'ல நாம் கம்பராமாயணத் தியமாக மட்டுமே நுகர்ந்து கிறோம். ஆனால் மலையாள 'ம் நூற்றுண்டிலிருந்து 'ண்டுவரைக் 'கம்ப ' என்ற பெய ந•த்து வந்தனர் என்று மலையாள நாட்டு அறிஞர் கூறுகின்றனர். உண்மையில் 12ம் நூற்றுண்டுவரை சிலப்பதிகாரத்தை நாடகமாக நடித்து வந்த மலையாள நாட்டு நடிகர் குழாம் புதிய கம்பராமாயணத்தையும் அதே முறையில் அமைத்து நாடகமாக நடிக்கத் தொடங்கினர் என்று தோற்றுகிறது. பண்டைத் தமிழகச் சிலம்பின் பண்பு அதே தமிழகத்தில் தோன்றிய கம்ப காவியத்திலும் பின்னணியில் மறைந்திருந்ததை மலையாள மக்கள் கண்டுணர்ந்தனர்--தமிழகம் இரண்டையும் இனித்தான் கண்டுணரவேண்டும்.

சிலம்பின் நாடகப் பண்பு--வெறும் புகழுரை புனைந்துரை அல்ல--அது உண்மையில் நாடகமே, கீழைநாட்டு நாடகக் கலையின் தலையூற்றே என்பதை நாடக இலக்கிய வரலாறு--கீழை உலக மேலையுலக நாடக இலக்கிய வரலாறு தெள்ளத் தெளியக் காட்டவல்லது. அவ்வரலாறுகளைத் துருவிச் சிலம்பின் நாடகப் பண்பு காண முனைவோம்.

தமிழ்போன்ற தனிமொழிகளின் இலக்கியமே கடல்போன்றது. உலக இலக்கியமோ கடல்கள் அடங்கிய மாகடல்--வெளி மாகடலாகிய வான வெளி, அண்டவெளி போன்று

பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரை. M.A.L.T

எல்லையற்றது. இந்த உலக இலக்கியத்திலே காவியம் உணர்ச்சிக் கவிதை, வசை இலக்கியம், புனைகதை, நாடகம், சிறுகதை, கட்டுரை முதலிய எத்தனை எத்தனையோ இலக்கியத் துறைகள் செழித்தோங்குகின்றன. ஒவ்வொரு மொழியும் இவற்றுள் ஒன்றும் பலவும் வளர்த்துப் பீடுபெறுகின்றன.

கலைகளில் சிறந்தது இலக்கியம், இலக்கியத் துறைகளில் சிறந்தது நாடகம் என்று பண்டைத் தமிழர் கருதினர். முத்தமிழில் அதைத் தனித்துறையாக, மற்ற இரண்டும் உள்ளடங்கிய உயர் துறையாக அவர்கள் வகுத்திருந்தனர். சமஸ்கிருதவாணரும் இதே கொள்கையுடையவராகவே இருந்தனர் என்று அறிகிறோம். 'காவியங்களில் சிறப்புடையது நாடகக் காப்பியம்' (காவ்யேஷு நாடகம் ரம்யம்) என்பது சமஸ்கிருதக் கலைவாணரிடையே வழங்கும் ஒரு பழம் பாடல் தொடர் ஆகும். இக்கருத்தை அவர்கள் செயலிலும் காட்டத் தவறவில்லை. சமஸ்கிருத இலக்கியத்தில் ஒரு மாபெரும் பகுதி நாடகமே யாகும். சமஸ்கிருதக் கலைஞர், கலையாராய்ச்சியாளர் காவியங்களில் காட்டிய அக்கரையைவிட நாடகங்களில் காட்டிய அக்கரையே மிகப் பெரிது. நாடகங்களும் சமஸ்கிருத இலக்கியத்தில் மிகப்பல. மிக உயர்ந்த பண்புகளும் உடையவை.

உலக நாடக இலக்கியம் : மூன்று மொழிமரபுகள்

உலக இலக்கியத்தில் நாடக இலக்கியத்தின் இடம் பெரிது. ஆனால் அதன் அளவு பெரிதன்று. உலக நாடக இலக்கியத்தில் இடம் பெறத்தக்க அளவு உயர்ந்த, பேரளவான நாடகக் கலை வளர்த்த மொழிகள் ஒரு சிலவே. பல நாடுகளில் மக்களிடையே நாடகக் கலைக்கு மிகுந்த செல்வாக்கு இருந்து வந்துள்ளதானாலும், அது பெரும்பாலும் இலக்கியத் தொடர்பற்ற தெருக் கூத்துக்களாகவோ அல்லது இலக்கியத் தொடர்பும் மக்கள் தொடர்பும் அற்ற, பணம் திரட்டும் தொழிலாகவோ தான் இன்றுவரை நடைபெற்று வருகின்றது. இலக்கிய முறையிலே கலை நாடகம் வளர்த்த பெருமையுடைய மொழிகளில் சிறந்தவை ஆங்கிலம், பிரஞ்சு, கிரேக்க இலத்தீன்மொழிகள், சமஸ்கிருதம், சீனம், ஜப்பான்மொழிகள் ஆகியவைகளே. இவற்றுள்ளும் தலைமை நிலையும் முதன்மை நிலையும் உடைய மொழிகள் மூன்றே மூன்றுதான்--ஆங்கிலம், கிரேக்க மொழி, சமஸ்கிருதம் ஆகியவையே.

ஆங்கில நாடக இலக்கியம் வளர்த்த நாடகாசிரியர்கள் மிகப் பலர்--ஆனால் உலக நாடகத்தில் இடம் பெறத்தக்க நாடகங்கள் ஷேக்ஸ்பியரின் நாடகங்களே. அவர் இயற்றிய முப்பதுக்கு மேற்பட்ட நாடகங்களில் உலக அரங்கிலே பத்துக்கு மேற்பட்டவை இடம்பெறத் தக்கன.

கிரேக்க நாடகங்கள் வீறியல் அல்லது துன்பியல் நாடகங்கள் (Tragedies) என்றும், இன்பியல் அல்லது களிநாடகங்கள் (Comedies) என்றும் இரு பிரிவுகளாக இயன்றன. ஒவ்வொரு பிரிவிலும் மூன்றுக்குக் குறையாத தலைசிறந்த நாடகக் கலைஞர்கள் தலைசிறந்த பல நாடகப் படைப்புகள் ஆக்கியுள்ளனர். அவற்றுள் பெரும்பாலான உலக நாடக இலக்கியத்திலே நிலையான இடம்பெறத் தக்கன.

நாடக இலக்கியத்திலே சமஸ்கிருத மொழியின் சிறப்பு மற்ற இரு மொழிகளையும் தாண்டியது என்பதற்கு ஐயமில்லை. ஏனென்றால் உலகின் தலைசிறந்த நாடகக் கவிஞர் வரிசையில் சமஸ்கிருதத்துக் கவிஞர் தொகையும் பெரிது. அதுபோல உலகின் தலைசிறந்த நாடக வரிசையிலும் அதற்குரிய நாடகங்கள் பல. இன்றைய அமெரிக்க மேலைநாட்டு நாடக அரங்குகளிலும் ஷேக்ஸ்பியர் நாடகங்களுடனும் பிரஞ்சு கிரேக்க நாடகங்களுடனும் போட்டி இடும் பெருமை சாகுந்தளம், மண்ணியல் சிறுதேர், (மிருச்சகடிகம்) முதலிய சமஸ்கிருத நாடகங்களுக்குக் கிட்டியுள்ளது.

நான்காம் மரபு : தமிழ்-மலையாள நாடகக் கலை

இம்மூன்று நாடக மரபுகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்தவர்கள் ஒரு விசித்திர உண்மையை நமக்குத் தெரிவிக்கின்றனர்.

மேனாட்டு நாடக மரபில் கிரேக்க மரபு ஐரோப்பாவெங்கும் பெரிதும் பின்பற்றப்பட்டு வந்தது. பிரஞ்சு நாடக ஆசிரியர்கள் உலக நாடக அரங்கில் முதலிடம் பெற்றவர்களையானாலும் அவர்கள் கிரேக்க மரபைப் பின்பற்றியே கலை வளர்த்தனர். ஆகவேதான் அவர்கள் கலைத் தரத்திற்கேற்ற அளவில் அவர்கள் மொழி நாடக இலக்கிய உலகில் சிறப்புப் பெறமுடியவில்லை. ஆனால் ஆங்கில நாட்டு நாடக மரபு, சிறப்பாக ஷேக்ஸ்பியர் மரபு கிரேக்க மரபைப் பின்பற்றவில்லை. ஆங்கில மண்ணிலேயே பிறந்து வளர்ந்த தனி மரபாக, இயற்கை மரபாக அது தனிப்பெரும் புகழ் நாட்டிற்று.

சமஸ்கிருத நாடக மரபு மேலைநாட்டில் உணரப்பட்ட போது, அந்நாட்டு அறிஞர் ஆங்கில கிரேக்க மரபுகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தனர். அது அருகில் உள்ள கிரேக்க நாட்டு மரபுடன் ஒரு சிறிதும் ஒவ்வாமல் தொலைவில் உள்ள ஷேக்ஸ்பியர் கால ஆங்கில மரபுடன் பெரிதும் ஒத்திருக்கக் கண்டனர். கிரேக்க மரபின் தனிச் சிறப்பு துன்பியல் இன்பியல் என்ற பிரிவினையே. இவ்விரண்டும் கிரேக்கர் கண்களில் நாடகக் கலையின் இரு பிரிவுகளாகக் கூடத் தோற்றவில்லை. இரு வேறு தனிக் கலைகளாகவே இயங்கின. ஆனால் ஆங்கில மரபில் இப்பிரிவினை இல்லை. அதுபோலவே சமஸ்கிருத மரபிலும் இப்பிரிவினை இல்லை. அருகில் இன்றி, காலத்தாலும் இடத்தாலும் தொலைப்பட்டு வேறு வேறான இந்த இரு மொழிகளும் காட்டிய ஒற்றுமை கண்டு கலையாராய்ச்சியாளர் வியப்பும் மலைப்பும் அடைந்தனர். ஆயினும் கிரேக்க மரபு இடையே கிரேக்க வாழ்வில் எழுந்த ஒரு செயற்கை மரபே என்றும், ஆங்கில சமஸ்கிருத மரபுகள் அச் செயற்கை மரபுக்கு முன்னும் பின்னும் வளர்ந்து பரவிய ஒரு உலகளாவிய இயற்கைப் பொது மரபே என்றும் விளக்கம் கூறி அவர்கள் ஓரளவு அமைதியுற்றனர்!

தென்னாட்டின் பக்கம் உலக கலையாராய்ச்சி அறிஞர்களின் கண்கள் திரும்பக் கூடுமானால், அவர்கள்

(10-ம் பக்கம் பார்க்க)

பொம்மைக் கணவன்

மரகதம், எனக்கு வசதியிருந்து என்ன பயன்? அணிந்து அழகு பார்க்க வைரமாலை இருந்து என்ன பயன்? இருப்புப்பெட்டியில் அவர் சம்பாதித்து வைத்துப்போன இருபதாயிரம் ரூபாய் அப்படியேதான் இருக்கிறது; கற்கோட்டை என மூன்றடுக்கு மாடி வீட்டைத்தான் அவர் கட்டிவிட்டிருக்கிறார் இவையெல்லாம் இழந்த என்வாழ்வுக்கு-கருகிப்போன என் இன்ப நினைவுகளுக்கு ஈடாகுமா மரகதம்? அந்த நாட்களில், நிலா வெளிச்சத்தில், நாம் பாய் விரித்து பாட்டி கதை பேசிக்கொள்வோமே, அப்போதெல்லாம் நாம் எண்ணி எண்ணி மகிழ்ந்தவை எவையெவை? இப்போது நாம் எண்ணி எண்ணி உருகுவது எவை எவை? எண்ணிப்பார்த்தாயா? நான் ஆசைத்தியக்காரி, உன்னையும் என் எண்ணிக்கையில் என் சேர்க்கவேண்டும்! மரகதம் என்னை மன்னித்துவிடு; மாட்டாயே! நீ கழுத்திலே கட்டிக்கொண்டுவரும் 'கருகுமணி'யைப் பார்த்துக் கிண்டல் செய்திருக்கிறேனல்லவா! உன் காதில் 'வலக்' இல்லாதது குறித்து எளிமையாகப் பேசியிருக்கிறேனல்லவா! அதற்கெல்லாம் நான் இப்போது அனுபவிக்கிறேனடி தோழி! என் வசமுள்ள வெள்ளி நாணயங்கள் என்னைப் பார்த்து எள்ளி நகையாடுகின்றன; அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் ஆபரணங்கள் 'ஏகோ, நீ ஒரு பெண்ணு?" என்று இடித்துரைக்கின்றன. பள்ளிப் பருவ காலத்திலே நீ என்னை அக்கடி பேராசைக்காரி என்று சொல்லுவாய். அப்போதெல்லாம் நான் உன்மீது சீறிவிழுந்திருக்கிறேன். 'சீ, சீ' என்னை யாரென்று நினைத்தாய்? என்று கடிந்துரைத்திருக்கிறேன். இப்போது அந்தப் பேராசை செத்துவிட்டதடி மரகதம்; அது மட்டுமல்ல என் வாழ்வும் செத்துவிட்டது தோழி!

செல்வந்தர் வீட்டிலே பிறந்தேன்; அது உனக்குத் தெரியும். வேண்டாத அளவுக்கு வேல்நிலங்களுண்டு; அதையும் நீ அறிவாய். ஏவலுக்கும், காவலுக்கும் பிடிகள் ஏராளம். இதையும் நான் சொல்லவேண்டாம். ஆனால் என் வாழ்வு? ஆம்; என் வாழ்வு என்னால்தான் கெட்டழிந்தது என்று சொல்வதற்கில்லைதான்; என் தந்தையின் 'அந்தஸ்து மோகம்' என் வாழ்க்கை அந்தாக இருந்து அரித்துவிட்டது. இரவு, பகல் இருபத்திநான்கு மணி நேரம் அவருடையஅந்தஸ்து போதையிலேயே ஊறிப்போன எனக்கும் அதே அந்தஸ்து மோகம்பிடித்துக்கொண்டது உன்னைப்போல நானும் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்திருந்தால், நீ இன்று காட்டிலே, கழனியிலே கணவனோடு இருப்பதிருக்கிறாயே அப்படியாவது இருந்திருப்பேன். உள்ளதைக் குத்து நல்லபடியாக வாழ்ந்திருப்பேன். தோழி, படிப்பு சிலருக்கு நல்லறிவைத் தருகிறது; சிலருக்கு அதே படிப்பு வாழ்வைப் புதைக்கும்குழியும் தோண்டுகிறது. படித்தால் அறிவு வளரும் என்றுதான் நான் மெட்ரிக்குலேஷன் படித்தேன். அதனால் வளர்ந்த கவுரவ வெறிதான், சாதாரண மாப்பிள்ளைகளை எல்லாம் என்னை வெறுக்கத் தூண்டியது. "பி. ஏ. பட்டம் பெற்று, பத்துலட்ச ரூபாய் சொத்துக்கு அதிபனாகவும் இருக்கும் மாப்பிள்ளைக்குத்தான் என் மகளைத் தருவேன்" என்று என் தந்தை கர்வமாகக் கூறினார். மகளின்மீது, அவளுடைய வாழ்க்கையின்பேரில் தந்தைக்கு எவ்வளவு பற்று என்றுதான். அந்த நேரத்தில் தோன்றும் யாருக்கும்; எனக்கும் அப்படித்தான் தோன்றிற்று. அந்த கர்வம் தான் என் வாழ்வுக்கு கொள்ளிக் கட்டையாக அமைந்தது என்பதை நான் இப்போது தானே உணர்கிறேன்.

என்னை மணமுடித்துக்கொள்ள முன்வந்த இளைஞர்களையும், அவர்களை நான் கழித்துக் கட்டிய திமிரையும், அவர்கள் இப்போது வாழும் நெறிமுறையையும் நினைத்துப்பார்த்தால் உள்ளத்திலே எவ்வளவு பெரிய திகில் எற்படுகிறது தெரியுமா? பணத்தோடு பணம் சேர்ந்தால் வாழ்வு தங்க மனோரஞ்சிதமாகுமென்றெண்ணியதின் தப்புக் கணக்கால் வாழ்க்கைப்பரீட்சையில் நான் தோல்வியடைந்துவிட்டேன். வாகை உனக்குத்தான் கிடைத்துவிட்டது.

எப்படியோ எனது அந்தஸ்து மோகத்திற் கேற்றபடியும், என் தகப்பனாரின் 'பெரியஇடத்து' விருப்பப்படியும் பெங்களூரில் ஒரு மாப்பிள்ளை கிடைத்தார். மாப்பிள்ளை அழகு ராஜாதான்; அறிவுப்பெட்டகம்தான்; அந்தஸ்திலும் எங்களுக்கு சம எடைதான். வசதியான குடும்பத்தைச் சார்ந்த இளம் டாக்டர் ஒருவர் எனக்குக் கணவராக வாய்த்தார். அப்போது எனக்கிருந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லைதான். உன்னை எத்தனை முறை வழியிலேகண்டு கர்வத்தால் பேசாமல் வந்திருக்கிறேன் என்று உனக்குத்தான் தெரியுமே! அந்த நேரத்தில் உன்முகம் சிவந்து பழமானதை இன்று நினைத்துப் பார்த்தால் உடலையே செந்தீ பற்றுவது போலிருக்கிறது. நினைத்தது கிடைத்துவிட்டது என்ற மகிழ்ச்சியில் தோழிகளையும் துச்சமெனக் கருதிவிட்டேன். அதற்கெல்லாம் சேர்த்து இப்போது மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் மரகதம். மன்னித்துவிடு தோழி மன்னித்துவிடு.

திருமணமாகிஒருவாரகாலம்நான், காரணமில்லாத பூரிப்பில் ஆழ்ந்திருந்தேன். குறித்த நேரத்தில் சாப்பிடுவதில்லை; தூங்குவதில்லை. என்னோடு வகுப்புத் தோழிகளாக இருந்து எனக்கு முன்னதாகவே திருமணம்செய்துகொண்ட நமதூர் உத்தியோகஸ்தர்களின் பெண்கள் அவர்களின் அனுபவங்களை முன் வைத்து என்னைக் கேலி செய்துகொண்டே இருந்தார்கள். எனக்கு காரணம் புரியவில்லை. கற்பகம் கன்னத்தைத் தடவிப்பார்த்தாள்; மீனும்பாள் மூக்கைப் பிடித்து இழுத்தாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லைதான். மணவறையில் சாத்திரப்படி என் கணவரின் கையைப் பிடித்துப் பார்த்ததைத் தவிர வேறு ஒரு 'பாவ'மும் அறியாத என்னை அந்த 'போக்கிரிப் பெண்கள்' சோதித்துப் பார்த்தார்கள். ஒருவேளை என் கணவன் என் கன்னத்தையும் மூக்கையும் ஆசை மேலீட்டால் கடித்திருக்கிருனு என்று பார்த்தார்களோ என்னவோ? இப்பேர்ப்பட்ட இன்பச் சோதனைகளெல்லாம்எனக்குதுன்பமூட்டுவனவாகத் தெரியவில்லை. அதற்கு மாருக என் கன்னங்களையும், மூக்கையும் தயார்படுத்திக் கொள்வதிலே முனைந்துவிட்டேன்! மருத்துவம் படித்திருந்த என் கணவர் ஏனோ தெரியவில்லை ஒரு வார காலம் என்னைத் தொடவே இல்லை. இதை மருத்துவ சிகிச்சை என்பதா, மனோதத்துவ சிகிச்சை என்றே புரியவில்லை. நான் அவருக்கு உரிமைப்பட்டவளாகி விட்ட பின்பும், நான் கைபடாத மலராகவே பெங்களூர் சேர்ந்தேன் அவரோடு.

நாங்கள் தனிக்குடித்தனம் தொடங்கிய அன்றே என் கணவருக்கும் ஒரு புது உத்தரவு பிறப்பிக்கப்பட்டது- அருகிலுள்ள மலையடிவாரத்து காசநோய் சிகிச்சைசாலையில் பண... வந்த என் கணவரின் ... நேரம் மாற்றப்பட்டுவிட்டது. இ... தம்பதிகள் என்ற ஈவு இரக்கம்... காருக்கு எங்கே இருக்கப்போகி... வாழ்வின் ரசத்தைக் கு... அனுத்துப்போன நடுத்தர வய... ருக்கு இரவிலே பூரண ஓய்வு ... வார்கள். வாலிபத்தின் மு... வாயிலில் உள்ளவர்களுக்கு '... டியூட்டி' என்பார்கள். இ... தீமுறை எவ்வளவு பெரிய ... நோய்க்கு அடிப்போடுகிறது ... பதை செங்கோலேந்திகள் உண... தில்லை. பெரும்பாவி நான்; ... வரை என் கணவன் முகத்... இரவில் பார்த்ததே இல்லை. இ... முழுதும் மலையடிவாரத்தி... விழித்திருந்துவிட்டு காலையிலே ... வார்; குளிப்பார். படுத்துவிடுவ... மாலையிலே எழுந்து மீண்டும் ம... யடிவாரத்துக்குப் போய்விடுவ... என் உள்ளத்துடிப்பு எப்படி இ... திருக்கும். பெருமூச்சு எரிக்... சக்தியிருந்தால் சிங்காதனங்கெ... லாம் பிடிசாம்பலா யிருக்கா... ஸ்ரீதனச்சொத்தாக நான் கொ... வந்த தோதகத்தி மரத்தால... கண்ணாடிக் கட்டிலும், பட்டை... டிய படுக்கையறைப் பால்கிண்... மும் தூசிபடிந்து வைத்த இட... லேயே கிடந்தன.

பச்சைத் தண்ணீர் அருந்திவி... பாசமுள்ள உன் கணவனுக்கு ... கில் நீ படுக்கும் இன்பம், என... பாலருந்தி பஞ்சணையில், அது... 'இன்பக் கனவு காண்பாய்' எ... வண்ண நூலால் பின்னப்பட்ட ... டுத் தலையணையை பக்கமணைத்... தூங்கும் எனக்கு இல்லை மரக... ஆம்; கிடைக்கவில்லை. இறுதிவ... ஏமாந்தே போனேன் மரகதம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ... கணவர் மேலதிகாரியிடம் கெ... கூததாடி விடுமுறை கேட்டு ... திருந்தார். உலகமே எனது சக்... கொடியின்கீழ் வந்து விட்ட... எண்ணி மகிழ்ந்தேன். தாகம் ... தல்வாண்டை போடலாம் எ... எண்ணம் தான் எனக்... பாழாய்ப் போன கதிரவன் போ... தொலையமாட்டானு என்று மு... கிக்கொண்டேன். உள்ளபடியே இ... பத்திற்கும், இருட்டிற்கும் உ...

(8-ம் பக்கம் பார்க்க)

எத்தனை ஆயிரமோ ?

1954-ஆம் ஆண்டில் பாரத் என்றழைக்கப்படுகின்ற இந்தியாவைச்சுற்றிப் பார்க்கவந்த வெளி நாட்டார் எண்ணிக்கை கீழ்வருமாறு :—

அமெரிக்காவிலிருந்து	...	9680
பாக்கிஸ்தானிலிருந்து	...	8707
பிரிட்டனிலிருந்து	...	7919
சிலோனிலிருந்து	...	3095
பிரான்சிலிருந்து	...	1199
பிறநாடுகளிலிருந்து	...	9400
ஆகமொத்தம்	...	40,000

யாத்திரை பண்ணிய வெளிநாட்டார் சுற்றிப்ப... உதவியாயிருக்க இந்திய சர்க்கார் 7 வழிகாட்டிகளை... மித்தனர். அதனால் சர்க்காருக்கு செலவு எ... ஆயிரமோ ?

“பாம்புகள் இறந்தது எல்லோருக்கும் ஆச்சரியத்தை அளித்தது. அச்சமயம் கமலினி இடைதுறை நாட்டில் தீவிரமாக வேவு பார்த்துக் கொண்டிருந்தாள். மங்கை ஆலங்காட்டில் தங்கி, என்னுடைய படையினருக்கும், ஒற்றர்களுக்கும் உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தாள். கோதை, தங்கம் இருவரையும் மங்கையின் மூலம் கமலினியிடம் அனுப்பி வைத்தேன்.

“கோதையும் தங்கமும் இடைதுறை நாட்டிற்குச் சென்றனர். இருவரும் ஆடல் பாடல்களிலும் தேர்ச்சிபெற்றிருந்தனர். அதனால் இவ்விருவரையும் அரண்மனை நாட்டியக்காரிகளாக நியமிக்க கமலினியினால் சுலபமாக முடிந்தது. பருவத்தினால் பொங்கிப் பூரிக்கும் அழகும், உடற்கட்டும் கண்டோரை மயக்கும் சக்தி பெற்றிருந்தன. அரண்மனையில் வீரர்கள் உட்பட பலர் கோதை, தங்கம் இருவர்மீதும் ‘கண்’ வைத்தனர்.

“ஆட்டத்தினாலும் பாட்டினாலும் பலரை மயக்கிவந்த கோதை, தங்கம் இருவருக்கும் சோதனைகாலமும் வந்துவிட்டது. ஒரு நாள் நள்ளிரவில் பணமுடிப்புகளுடன் இடைதுறையானின் படைத் தலைவர்கள் இருவர், யாரும் அறியமுடியாத நிலையில் வீட்டிற்குள் நுழைந்தனர். இதை முதலிலே எதிர்பார்த்திருந்த கோதையும், தங்கமும் அவர்களை வரவேற்று, உணவளித்து, ஆடிப்பாடிக் களித்தனர். கடைசியில் கோதை ஒரு வீரனையும் தங்கம் ஒரு வீரனையும் அழைத்துக்கொண்டு தனித் தனி அறைக்குள் நுழைந்தனர்.

“மறுநாள் பொழுது புலர்ந்தது. ... ஆடவர்களும் படுக்கையி... எழவில்லை. நீண்டநேர... விழிக்காததால் இரு...நக்கும் சந்தேகம் வளர்ந்... றைகளுக்குள் சென்று ... எழுப்பிப் பார்த்தனர். ...த இரு வீரர்களும் ...ட நேரமாகிவிட்டது ...தான் அவர்களுக்குத் ... நடித்து

“அன்று மாலை அவர்களைப் பார்த்து வரச் சென்ற நமது ஒற்றர்களிடம் விபரம் அறிவிக்கப்பட்டது. அந்த ஒற்றர்கள் அன்றிரவே பிணங்களை அப்புறப்படுத்தி விட்டு, பணமுடிப்புகளையும் பெற்றுக் கொண்டு வந்து விட்டனர். இச்செய்தி எனக்கு அறிவிக்கப்பட்டது. நான் மகிழ்ச்சியுற்றேன். ஆனால் இந்த இரு பெண்களிடமும் இடைதுறையான் சிக்காமல் தப்பிவிட்டான். அதன்பிறகு எண்ணற்ற வீரர்கள் கோதை, தங்கத்தால் மாண்டு மடிந்தனர். இதன்மூலம் நாம் ஒரு புறம் பழிக்குப் பழி வாங்கி வந்தோம். ஆனால் கோதையும் தங்கமும் அளவற்ற துயரத்தை அடைந்தனர். அழுதனர். துடித்தனர். தங்களுக்குப் பிடித்த ஆண்களை ஏற்று வாழ முடியவில்லையே என்று பரிதவித்தனர். அவர்களுக்கு மங்கை ஆறுதல் சொல்லிக் கடமையை உணர்த்தி வந்தாள்.

“உங்களுக்குக் கூட நினைவிருக்கலாம். நீங்கள் இருவரும் இடைதுறை நாட்டின்மீது படையெடுத்துச் செல்லும் வழியில் ஆலங்காட்டு மாளிகைக்கு வந்தீர்கள். அங்கே இரு பாடைகள் முன்செல்ல, இரண்டு பெண்கள் துக்கத்தால் கண்ணீர் பெருக, துணியால் வாயை மூடிக்கொண்டு வந்துகொண்டிருந்தார்கள். உங்களிருவரையும் இன்னாரென்று அறிவித்ததும், மண்டியிட்டு வணங்கி ‘அன்னை வாழ்க’ என்று கூறிவிட்டுச் சென்றதை நீங்கள் மறந்திருக்க முடியாது.”

ஏககாலத்தில் தளநாயகனும், இராசேந்திரனும், வியப்பினால் ‘ஆமாம்! ஆமாம்!’ என்றார்கள்.

அங்கிருந்தோர் அனைவரும் அன்னையையும், இராசேந்திரனையும், தளநாயகனையும் ஆச்சரியத்துடன் மாறி மாறிப் பார்த்தனர். அன்னை மேலும் சொல்ல ஆரம்பித்தாள்.

“பெண்களுக்கும் இதயம் உண்டு; பாசம் உண்டு; காதல் உண்டு; இதற்குக் கோதையும் தங்கமும் விதிவிலக்கல்ல. எனது படையில் புதிதாகச் சேர்ந்த ஒரு வீரன், கோதை நிலைமை தெரியாமல் அவளைக் காதலிக்க ஆரம்பித்தான். கோதையும் அவனிடம் மனம் பறிகொடுத்தாள். ஆனால் இருவரும் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. மங்கை அவர்களிடையே வளர்ந்து வரும் நேசத்தைக் கண்டாள். இதனால் விபரீதம் நேரலாம் என்பதை அறிந்தாள். அவர்களிருவரும் சந்தித்துப் பேச முடியாமல் சூழ்நிலையை உண்டாக்கி வந்தாள்.

“கோதையும் தங்கமும் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்ற பல வீரர்கள் உயிருடன் திரும்பவில்லை என்ற செய்தி கொஞ்சம் கொஞ்சமாகப் பரவிற்று. அதனால் இடைதுறை நாட்டிலிருந்து இருவரையும் திரும்ப வரவழைக்க வேண்டிய அவசியமேற்பட்டது. கோதையும் தங்கமும் ஆலங்காட்டில் வந்து தங்கினர். மற்ற வீரர்களுடன் சேர்ந்து பழகாமல் தனித்திருக்கச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் மங்கைக்கு ஏற்பட்டது. இந்நிலையில் தான் கோதைக்கும் வீரனுக்கும் காதல் ஏற்பட்டு வளர்ந்து வந்தது.

“இருவரும் சந்திக்க முடியாமல் இடையூறு பல நேர்ந்த போதும், அவர்களுடைய காதல் இன்னும் அதிகமாக வளர்ந்தது. ஒரு நாள் நமது படையினர் வெளியே சென்றிருந்த சமயம், கோதையின் காதலன் படையிலிருந்து பிரிந்து விட்டான். பிறகு இரகசியமாக வந்து கோதையைச் சந்தித்து அவளைத் தன்னுடன் வந்துவிடும்படி அழைத்தான். காதலுக்குக் கண்ணில்லை என்ற முதுமொழிப்படி கோதையும் சம்மதித்து அவனுடன் வெளியேறினாள். அப்பொழுது தங்கம் தூங்கிக்கொண்டிருந்ததால் அவளுக்கு நடந்த விபரம் எதுவும் தெரியாது.

“கோதையும் அவளுடைய காதலனும் நீண்டதூரம் வந்து மனித சஞ்சாரமே இல்லாத இடத்தில் அமர்ந்தனர். நீண்ட நாட்கள் அடக்கி வைத்த உணர்ச்சி படமெடுத்தாட இருவரும் தங்களை மறந்து பேசிச் சிரித்து, விளையாடி மகிழ்ந்தனர். அவர்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை. இருவர் முகத்திலும் மகிழ்ச்சி கூத்தாட, சந்தோஷத்துடனும் பூரிப்புடனும் திரும்பினர். வரும் வழியில் அந்த வீரன் கீழே விழுந்து மாண்டான். பயமும், துயரமும் ஒருங்கே அடைந்த கோதை தங்கத்திடம் வந்து நடந்ததைச் சொல்லி அழுதாள். அன்றிரவு கோதை வாழ்க்கையில் வெறுப்புற்று தற்கொலை செய்து கொண்டாள்.

“நான் எதிரிகளைக் கொல்வதற்காக இப்புது முறையைக் கடைபிடித்தேன். ஆனால் அதன் முடிவு பெரும் பயங்கரமாகவே இருந்தது. கோதை, தங்கம் இருவரும் ஆசை காட்டி, இடைதுறை வீரர்களில் நாற்றுக்கணக்கானவர்களை மோசம் செய்து கொன்றனர். கடைசியில் கோதையே தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு வந்துவிட்டது.

“இதற்கிடையில் கமலினியும் தன் கற்பைப் பறிகொடுத்து வாழ மனமின்றி இறந்தாள். இம்மாதிரி கடமையைச் செய்த துணிச்சல் மிகுந்த பல பெண்கள் இறந்தனர். என்னைத் தூக்கிச்சென்று இடைதுறை நாட்டில் ஒரு மாளிகையில் சிறை வைத்தார்கள் அல்லவா! அந்த மாளிகையைச் சேர்ந்தவர்களை எனது வீரர்கள் கொன்றதுடன், பழிக்குப் பழியாக அவர்களுடைய ஒரே பெண் இன்பவல்லியையும், இன்னும் இரு பெண்களையும் தூக்கிக்கொண்டு வந்து விட்டனர். அவர்களைத்தான பவளத்தீவில் நான் சிறை வைத்திருந்தேன். ஈழத்திலிருந்து திரும்பிய தளபதியும் இளவரசரும் புயலினால் தாக்குண்டு, பவளத்தீவில் கரையேறினர்.

“இளவரசர் அங்கே இன்பவல்லியைக் கண்டு காதலித்தார். இச்செய்தி எனக்கு துயரத்தைத் தந்தது. இடைதுறையான் சோழநாட்டைக் கைப்பற்றியதும், நீங்களும், அரசகுடும்பத்தினரும் சிறைப்பட்டதும், தளநாயகரும் இராசேந்திரரும் பவளத்தீவிற்கு வந்ததும், ஈழம் சென்று திரும்பிய படைகள் புயலினால் சிதறுண்டதும், எதிரி என்று கருதப்பட்டு சிறை வைக்கப்பட்ட இன்பவல்லியை இளவரசர் காதலித்ததும்; இதனை பயனாக என் படையில் நீண்ட சேவை செய்தவளும், எனது வலது கை என்று

நான் கருதியவளுமான மங்கையின் கணவனை இளவரசர் குத்திக் கொன்றதும், சூழ்நிலை எனக்கு எதிராகத் திரும்புவதாக நினைத்தேன்.''

இவ்வாறு அன்னை வருத்தத்துடன் சொல்லிக்கொண்டு வரும்போது பக்கத்திலிருந்த மங்கை அழுதுவிட்டாள். அவளுடைய கண்களில் கண்ணீர் பெருகி வழிந்ததைக் கண்ட இராசேந்திரன திடுக்கிட்டான்.

இராசராசன் எதிரியின் பெண்ணுகிய இனபவல்லியைக் காதலித்ததும், மங்கையின் கணவனைக் கொன்றதும் அரசனுக்கு மனக்கசப்பைத் தந்தது. ''என் கொன்ருன் இராசராசன்?'' என்று கேட்டான் தளநாயகனிடம். தளநாயகன் நடந்ததைக் கூறினன். விபரம் அறிந்த மன்னன் ''என் மகனுயிருந்தாலும் சட்டப்படி விசாரணை செய்யப்பட்டு தண்டனை விதிக்கப்படுவான்!'' என்று உரத்துக் கூவினன். அதுவரை கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்த மங்கை எழுந்தாள். அரசர் முன்பு வந்து வணங்கினுள்.

''அரசே! இளவரசர் ஆத்திரத்தில் செய்த காரியம் அது இதனுல் என்ன விளையுமென்பதை அவர் அப்போது அறியவில்லை. அதன் பிறகுதான் நான் யார் என்பதையும், குத்தப்பட்ட வீரர் என் கணவர் என்பதையும் அறிந்தார். பல முறை என்னிடம் மன்னிப்புக் கேட்டார். நானும் மனப்பூர்வமாக மன்னித்துவிட்டேன். இன்பவல்லியும் இளவரசர் சார்பில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். அதன்பிறகு நடந்த சோழநாட்டின் மீட்சிப் போரில் இளவரசருடனும், தளபதியுடனும் நாங்கள் அனைவருமே சேர்ந்து, சகோதரர்கள் போல் பழகி, கடமையாற்றினேம். தாங்கள் இளவரசருக்குத் தண்டனை விதிப்பதால் என் கணவர் திரும்பிவரப் போவதுமில்லை. என் கண்ணீர் நிற்கப் போவதுமில்லை. அதற்குப் பதில் சோழநாடு அரசகுடும்பத்தில் உதித்த ஒரு வீரனை இழந்துவிடும். அரசருக்குப் பதில் அரியாசனம் ஏற வேண்டிய ஒரு உத்தமனை இழந்துவிடும். இன்று நான் கண்ணீர் விடுவதைப் போல, நாளை இன்பவல்லியும் கண்ணீர் விடுவாள். அதனுல் இளவரசருக்கு எந்தத் தண்டனையும் தாங்கள் விதிக்கக் கூடாது என்று என சார்பில் கேட்டுக்கொள்கிறேன. அத்துடன் இளவரசர் இன்பவல்லியை மணந்து கொள்ள சம்மதமளிக்கவும் வேண்டுகிறேன்'' என்ருள். அரசன் தளநாயகனைத் திரும்பிப் பார்த்தான். தளநாயகனும் மங்கையின் பேச்சை ஆதரிப்பவன் போல் தலையை ஆட்டினன். பிறகு அன்னை தொடர்ந்து பேசினுள்.

''அரசே! மங்கை கடமையை உணர்ந்தவள். அரசியல் விவகாரம் அறிந்தவள். அவள் சொல்லுவதை நானும் ஆதரிக்கிறேன்'' என்ருள் அன்னை. அங்கு கூடியிருந்தோர் அனைவரும் ''அன்னை வாழ்க! மன்னர் வாழ்க! இளவரசர் வாழ்க! சோழநாடு வாழ்க!'' என்று கோஷமிட்டனர். கோஷம் அடங்கச் சிறிதுநேரம் பிடித்தது. அமைதி பிறந்ததும் அன்னை மேலும் பேசினுள்.

''தளபதியும், இளவரசரும் ஆயிரந்தீவுக்கு வந்தது சோழநாட்டின் அதிர்ஷ்டம் என்று எண்ணினேன். முயற்சியைத் தளரவிடாமல், புதிய திட்டம் தீட்டினேன். அதன்படி எனது படைகளும், சோழநாட்டுப் படைகளும் ஒழுங்காகத் திட்டத்தை நிறைவேற்றினர். இவ்வேலைகளுக்கிடையே தளபதி தளநாயகர்-நந்தினி, இளவரசர்-இன்பவல்லி காதல் குறுக்கிடாமல் அவர்களிடமிருந்து உறுதி வாங்கினேன். எல்லாம் வெற்றியாக முடிந்தது.

''ஆனுல் என்னையும் இன்னும் எண்ணற்ற சோழநாட்டுப் பெண்களையும் கற்பழித்து மோசம் செய்த வஞ்சகன் இடைதுறையானை நான் என் கையினுல் கொல்ல நினைத்தேன். அதுதான் முடியாமல் போயிற்று. 'வஞ்சகன் வீழ்ந்தான்' என்ற செய்தி எனக்குக் கிடைத்ததும், அதுவரை நான் ஆண்டுவந்த ஆயிரந்திவுகளையும் தங்கள் ஆட்சிக்கு உட்பட்டதாகப் பிரகடனம் செய்தேன்.

''எனது கடைசி ஆசை சோழநாட்டு மண்ணிலே மிதிக்கவேண்டும் என்பதுதான. தங்கள் அழைப்பும் கிடைத்தது. அதை ஏற்று மகிழ்ச்சியுடன் இங்கு வந்தேன,'' என்று கூறி முடித்தாள் அன்னை. அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் ''அன்னை வாழ்க! சோழநாடு வாழ்க! என்று மீண்டும் கோஷமிட்டனர். மன்னன் இராசேந்திரன் அன்னையை அரண்மனைக்கு வரும்படி அழைத்தான். ''அரண்மனைக்கு வரவும், அரசகுடும்பத்தினருடன் உரையாடவும் நான் அருகதையற்றவள். நான் இந்த இடத்திலேயே தங்கியிருக்கிறேன்!'' என்ருள் அன்னை. அரசன் அன்னையை வற்புறுத்த மனமின்றி அரண்மனைக்குத திரும்பினன். அன்னை இளமரக்காவில் தங்கினுள். அவளுடன் மங்கை, மரகதம், தங்கம் மற்றும் பல பெண்களும் தங்கியிருந்தார்கள்.

தளநாயகன் அரண்மனையை அடைந்தான். நந்தினியும் அவன் கூடச் சென்ருள். அன்னையின் படையினரும், சோழநாட்டுப் படையினரும் பாசறைகளுக்குத் திரும்பினர். ஆனுல், அன்னை நகருக்குள் வருவாள், அவளைக் காணலாம் என்ற ஆவலுடன் காத்திருந்த ஆயிரக்கணக்கான தஞ்சைநகர மக்கள், ஏமாந்து தங்கள் தங்கள் இல்லம் திரும்பினர்.

அரண்மனைக்குத் திரும்பிய அரசரிடம் அன்னையை அழைத்து வரும்படி பலர் வேண்டுகோள் விடுத்தனர். நாட்டையும், நகரையும். அரசரையும், அவருடைய குடும்பத்தினரையும் காப்பாற்ற அன்னை எடுத்துக்கொண்ட பெருமுயற்சி நகரெங்கும் விரைவில் பரவியது. நாட்டின் நலனுக்காக--அதன் விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்த அன்னையை -- அந்த வீராங்கனையைப் பார்க்க மக்கள் ஆசைப்பட்டனர்.

மக்களின் ஆர்வத்தைக், கண்ட அரசன், தளநாயகனையும் நந்தினியையும்அழைத்தான். அரசனுடைய விருப்பத்திற்கிணங்கா விட்டாலும், மக்களின் விருப்பத்திற் கிணங்கியாவது சோழநாட்டின் தலைநகருக்குள் வரும்படியும், அன்னையைப் பார்க்க மக்கள் ஆவலாயிருப்பதாகவும் அன்னையிடம் கூறி, எப்படியாவது அன்னையை அழைத்து வரும்படி கூறினுன் மன்னன். இப்பணியை தளநாயகனும் நந்தினியும் ஏற்றனர். இச்செய்தி தஞ்சை நகரமக்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

மறுநாள் நகரமே உற்சாகத்துடன் காணப்பட்டது. மக்கள் சுறுசுறுப்புடன் அங்குமிங்கும் போய் வந்து கொண்டிருந்தனர். தெருவெல்லாம் தோரணங்களும், அன்னையை வரவேற்கும் வாசகங்களும் அமைத்து நகரை அலங்கரித்திருந்தனர். இராசவீதிகளில் மக்கள் குழுமி நின்றனர். தளநாயகனும், நந்தினியும், ஐம்பெருங் குழுவினரும், பெருங்குடி மக்களில் சிலரும் செல்ல, பட்டத்து யானை முன் செல்ல, அதற்குப் பின்னுல் பல வீரர்கள் குதிரைகளில் செல்ல, தாரை, தப்பட்டை, மேளம், முரசு முழங்க, அன்னையை அழைத்துவர ஒரு அழகிய பல்லக்கையும் தூக்கிச் சென்றனர்.

ஊர்வலம் நகரைக் கடந்து இளமரக்காவை அடைந்தது. எல்லோரும் அங்கேயே நின்றனர். தளநாயகனும், நந்தினியும், ஐம்பெருங் குழுவினரும் மாளிகைக்குள் நுழைந்தனர். அங்கே மங்கையும், மரகதமும், தங்கமும், மற்றும் பல பெண்களும் இருந்தார்கள். தளநாயகனும், நந்தினியும் ''அன்னை எங்கே?'' என்று கேட்டார்கள். ''நேற்று இரவு அறைக்குள் சென்ருர்கள். நீண்ட நேரம் ஏதோ யோசித்துக்கொண்டு இங்குமங்கும் உலாவினுர்கள். பிறகு ஓலைகளும் எழுதுகோலும் கொண்டு வரும்படி எனக்குப் பணித்தார்கள். நான் அவற்றைக் கொண்டுவந்து அவர்களிடம் கொடுத்தேன் ... போது அவர்களுடைய முக... யிருந்தது. என்னைப் போக... லிக் கதவை அடைத்துக் ... டார்கள். பிறகு நீண்ட ... எழுதிக் கொண்டிருந்த... அவர்கள் தூங்க ஆரம்பிக்கு... அதிகாலையில் சாமகோ... விட்டது. இரவு முழுவது... திருந்ததால் அன்னை அயர்... திரை செய்கிருர்கள் அ... தூக்கத்தைக் கலைக்க ... மென்று நினைத்துத்தான் ... னும் நாங்கள் எழுப்பவி... என்ருள் மங்கை.

பிறகு மங்கையும் நந்தி... சென்று கதவைத் தட்டின... எவ்விதப் பதிலும் இல்லை. ... கதவைத் தள்ளினுள். கதவு திறந்துகொண்டது. ... சென்ருள். ''அம்மா!'' ... பெருங் கூச்சலிட்டுக் க... நந்தினி. மங்கையும் உள்ளே... ருள். அவளும் ''அம்மா!'' கதறி அழுதாள். மங்கையு... தினியும் போட்ட சப்தம் எ... ரையும் திடுக்கிடச் செய்தது. ... லோரும் ஓடிவந்து எட்டிப்... தனர். அவர்கள் அறைக்குள் ... காட்சி எல்லோரையும் தி... நிற்கச் செய்தது.

(அடுத்த இதழில் முடியும்)

அடுத்த இத...

சிரிப்புத்தான் வருகு...

◉

சிறை மீண்ட காதலர்

[பாரதி மலரில் வெளிய... கடிதத்திற்குப் பதில்]

கண்ணதாசன் எழுதுகிருர்.

SANKARAN PROGRESSIVE TUTORIALS TIRUCHI

S.P.T

SANKARAN PROGRESSIVE TUTORIAL

★ COLLEGE & HIGH SCHOOL ★

KARUNANIDHI PARK SANKARAM PILLAI ROA...
TEPPAKULAM P.O. TIRUCHIRAPALLI

Re-opens 10th June 1955

S.S.L.C., Inter., B.A., etc.,

(All parts & groups)

The greatest living Poet,

BHARATHIDASAN

will teach you Tamil!

Mrs. JUDITH LOUIS, B.A. (Ho...
Vice-Principal

N. J. Devadas, M.A.
Principal

...வன்...

(...தாடர்ச்சி)

...த்திற்கும் பகலுக்
...ஒான். பூனை பகலைக்
இருட்டை விரும்புகிறது:
சுவர் தாண்ட இருட்டை
...டுகிருன். அதுபோலவே
...ள்ளங்கள் இன்பந் துய்க்க
... எதிர்நோக்குகின்றனர்.
அப்படியே தான் காத்
...தன். மாலை ஆறுமணி
...ம்; கணவர் மேல்தளத்திலே
நகரின் வனப்பை சுவைத்
...ண்டிருந்தார். நான் எதிர்
...யிருக்கும் விளையாடல்களை
... சரியாகக்கூட சமைக்க
கூட்டுக்கு உப்பை அதிகம்
...அதை ஈடுசெய்ய குழம்புக்கு
போடாமல் சமையல் செய்
...தன். அவரும் அன்று
...பொருட்படுத்தவில்லை.
... கைமாறியது; சூரியன்
...; நிலா வந்தாள். வாசற்
... தாளிட்டேன்; அடுப்பை
...த்துவிட்டு சமயல்கட்டுக் கத
...பூட்டினேன். அவர் படுக்கை
...குள் இருந்தார். இருட்டிலே
...று மின்மினிப் பூச்சிகள்
...தாரப்போல் மொய்த்திருப்பது
ரேடியம் பதிக்கப்பட்ட விலை
... அவருடைய கைக்கெடி
...வற்றிலே தொங்கியவண்ண
...மின்...கொண்டிருந்தது.
... விளக்குகளையும் அணைத்து
...யால் இருளில் தடவிக்
...ட கட்டிலைக் கண்டுபிடிக்க
...யநாயிற்று. தவறுதலாக
சாய்ந்திருந்த வலப்பக்கத்
... போய்விட்டேன். மரகதம்
...லக் கூடாததைச் சொல்கி
அவர் அப்படியே என்னைத்
தன் பக்கத்தில் போட்டுக்
...டார். பல்லி சத்தமிடுவ
...தான் நீ கேட்டிருப்பாயே;
...ப்போல, ஆனல் சத்தத்திற்கு
நேரம் விட்டு என்னுடைய
...ைப் பூப்பரிக்கும் ஆண்டி கை
...க்கிறார். பல்லிச் சத்தத்தைப்
...று சிறிய 'இச்' ஒலிகளின்
...வை வாசல் கதவை மேலதி
...ன் சேவகன் இடித்ததைக்
...அமிழ்த்திவிட்டன. கண்ணும்
...ம் வேறென்றில் பதிந்திருக்
...து துப்பாக்கி ஏந்தி எதிரே
நின்றதும் தெரிவதில்லை

...வ பனிரெண்டு மணி. என்
'இச்' ஒலியோடு பிரிந்தார்.
... ஊரில் வைகூரி பார்த்
...து. தினம் தினம் பத்துப்

பேர் மடிந்துகொண்டிருக்கிறார்கள்" என்று அவசரக் கட்டளையைப் பிறப்பித்து அவரை அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். வெறிபிடித்தவளாக வெறும் பஞ்சுமெத்தையில் புரண்டேன். மறுநாள் காலை பத்து மணிக்குத்தான் எழுந்தேன்.

ஒரு வாரம் கடந்துவிட்டது. அவர் வரவில்லை. "கடமை! கடமை!" என்று தினந்தோறும் கடிதம் எழுதிக்கொண்டிருந்தார். அவருடைய கடமை என் வாழ்வை கட்டைத் ... தளத்திற்கு வழியனுப்பிக் கொண்டிருந்தது.

எனது நெருங்கிய தோழி தன் கணவனுடன் என் இல்லம் வந்திருந்தாள். அவள் நடுத்தரக் குடும்பத்திலே பிறந்து, சாதாரண மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப் பட்டவள். விருந்தினர் வந்திருப்பதைக் குறிப்பிட்டு என் கணவருக்கு கடிதம் எழுதியிருந்தேன். அடுத்த ஞாயிற்றுக்கிழமை வருவதாக பதில் முடங்கல் தீட்டியிருந்தார். எனக்கு ஓரளவு திருப்திதான். ஆனல் வரப்போகும் ஞாயிறும் போன ஞாயிறு மாதிரி இருந்திடக்கூடாதே என்ற ஏக்கம் ஒருபக்கம் இல்லாமலில்லை.

ஞாயிறு வந்தது. ஞாயிறு தோன்றினுன். மணி பத்தாயிற்று. பனிரெண்டாயிற்று. அவர் வரவில்லை. மாலை மூன்று மணிக்கு சேவகன் ஒருவந்தான். "அம்மா" என்றான

"என்னடா ஏகாம்பரம்" என்றேன்

"ஐயா!"

"வந்திட்டாரா? எங்கே?" என்றேன் ஆவலாக.

"ஐயா, போய்விட்டார் வைகூரியில்!" என்றான்.

என் மூச்சு நின்றது. பக்கத்தில் நின்ற என் தோழி என்னைப் படுக்கையில் சாய்த்து வைத்தாள். ஏறத்தாழ இன்றோடு அவர் போய் நாற்பது நாளாகின்றன. பெங்களூரில், பெரிய மாளிகையில்தான் வசிக்கிறேன். பயன்? பணக்கார மாப்பிள்ளை கிடைத்தார்--விருப்பத்திற்கிணங்க படித்தவராகக் கிடைத்தார். வாழ்வு கிடைக்கவில்லை. உன் வாழ்வைக் கண்டு நான் பொறாமைப் படுகிறேன்.

அடுத்த மாதம் உன்னுடைய கிராமத்திற்கு வருகிறேன். வரும்போது உன் மகள் வசந்தவதிக்கு முத்துமாலை வாங்கி வருவேன். வைரவன்பட்டி ரயிலடிக்கு வண்டி அனுப்பு.

◉

ஜூன் 18!

☆ வளமிகுந்த நாடு வாழ்விழந்தது எப்படி?
☆ சீரும் சிறப்பும் சிதறியோடியது எவ்வாறு?
திராவிடத்தின் பொருள் வளம இனி எப்படி அமையப்போகிறது?

பொருளாதாரத் தொடர் கட்டுரை!

ஈ. வி. கே. சம்பத் எழுதும்

...வாழ்வது எப்படியோ?"

...ூன் 18 தென்றல் இதழில் தொடங்குகிறது.

எங்கள் திருமணத்திற்கு நேரில்வந்தும் வெளியூர்களிலிருந்தும் வாழ்த்து அனுப்பியவர்களுக்கு எங்கள் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். சி. வி. இராசன்—தனலட்சுமி.

அவர்களின்
திருமண முறைகள்

இந்தியாவின் பூர்வீகக்குடிமக்களில் ஒரு சாரார் "சாந்தல்" வகுப்பார்.

நகரமாந்தருடைய தொடர்பு பெருகப் பெருக அவர்கள் தங்கள் ஆதிகால பழக்க வழக்கங்களையும் முறைகளையும் மாற்றிக்கொண்டேயிருக்கிறார்கள். அரை நிர்வாண கோலத்திலிருந்த பெண்கள் நகரத்திலுள்ள பெண்களைப்போல உடையணியத் தயாராகிவிட்டனர். வர்ண ரவிக்கைகளையும் பாவாடைகளையும் ரம்மியமான முறையில் அணிகின்றனர்; தங்கள் உடைகளைப்பற்றி நுணுக்கமாகக் கவனம் செலுத்துகின்றனர். கூந்தலைச்சிங்காரித்துக்கொள்வதிலும், பூக்களை சொருகிக்கொள்வதிலும் அவர்களுக்கு அலாதி ஆசை.

அவ்வகுப்பாரிடையே நான்கு வகைத் திருமண முறைகள் வழக்கத்திலிருந்து வருகின்றன. (1 தன்மீது பிரியமில்லாத ஒரு பெண்ணை ஒரு வாலிபன் மணக்க விரும்பினல், அவள் நெற்றியில் அவன் செந்தூரத்திலகமிடுவானேயாகில், அவளைக் கட்டாயப்படுத்தித் தன்னைத் திருமணம் செய்துகொள்ளச் செய்யலாம்.

2. தன்னை மணக்க விரும்பாத வாலிபன் வீட்டிற்கு அவனை மணக்க உறுதிபூண்டுள்ள பெண் ஒரு பானை நிறைய அரிசியில் ஆக்கப்பட்ட பானத்தை எடுத்துக்கொண்டு செல்லலாம். ஒருவார காலம் அவள் அங்கு எப்படியாவது சமாளித்துக் கொண்டு குடியிருந்து விட்டாளென்றால் அந்த வாலிபன் அவளை நிச்சயமாய்த் திருமணம் செய்துகொள்ளவேண்டும். ஒரு வார காலத்திற்குள் அவளை அவன் தன் வீட்டைவிட்டுத் துரத்திவிட முடிந்ததெனில், அவளை மணம் செய்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கில்லை. அவளைத் துரத்தும் முறையில் தன் உடல் வலிமையை அவன் பிரயோகிக்கக்கூடாது. அவளைத் திட்டலாம்; குளிர்ந்த நீரை அவள்மீது ஊற்றலாம்; இத்யாதி இத்யாதி.

3. ஒரு கூட்டத்திலிருந்து ஒரு பெண்ணின் கையைப் பற்றி இழுத்தால் அப்படி இழுத்த வாலிபனை அவள் மணம் செய்துகொள்ளவேண்டும்.

4. பெற்றோராலும் பெரியோராலும் ஏற்பாடு செய்யப்பட்ட மணம் நான்காவது வகை.

சாந்தல் வகுப்பினருக்கிடையே விவாக ரத்து செய்துகொள்ளும் முறை மிகச் சுலுவானது; ஆனல், அதை அவர்கள் அதிகமாக உபயோகப்படுத்துவதில்லை. விவாகரத்துக்கான கட்டணம் சர்வஜன விருந்து ஏற்பாடு செய்ய ரூபா ஐம்பதும் ஒரு பன்றியுமேயாகும்.

விவாகரத்து நடத்தப்படுவது மிக விசித்திரமான சடங்கேயாகும். பானை நிறைய அரிசியிலாக்கப்பட்ட பானத்தையும், கொழுந்து ஒன்றையும் கணவனும் மனைவியும் பஞ்சாயத்தார் முன்னிலையில் கொண்டுவந்து நிற்பார்கள்; சூரியனுக்கு எதிர்ப்புறமாக மனைவி பாதி பானையைக் காலிசெய்து கொழுந்தை இரு பாகங்களாக முறிப்பாள்; கணவனும் அவ்விதமே மற்ற பாதியைக் காலிசெய்து அந்தக் கொழுந்தை முறிப்பான். உடனே திருமண பந்தம் முறிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுவிடும். குழந்தைகளெப்போதும் பெண்களின் பாதுகாப்பில் தானிருப்பார்கள்.

சாந்தல் வகுப்பாரிடையே ஏழு பிரிவுகள். ஒரு பிரிவுக்குள்ளேயே மணம் செய்துகொள்வதென்பது இயலாது. ஒரு பிரிவைச் சேர்ந்த ஒருவன் வேறொரு பிரிவைச் சேர்ந்தவளைத்தான் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும். பலதாரமான வழக்கம் அறவே கிடையாது.

ஒவ்வொரு கிராமத்திலும் 'பிரம்மசாரிகள் பொழுதுபோக்குமிடம்'. ஒன்றுண்டு. அங்கே யுவர்களும் யுவதிகளும் மாலை நேரங்களில் சந்திப்பார்கள்.

—"ட்ரிப்யூன்"

வெள்ளித்திரையில்

நெப்டியூன் ஸ்டுடியோவில்

★ அறிஞர் அண்ணா எழுதிய வேலைக்காரியின் ஹிந்தி பதிப்பு 'நயாஆத்மி' என்ற பெயரில் வெகு வேகமாகத் தயாராகிறது. கோப் நடிக்கும் பைத்தியக்கார ஆஸ்பத்திரி காட்சி சமீபத்தில் படமாக்கப்பட்டது. தெலுங்குப் பதிப்பில் கோப்பிற்கு பதில் ரேலங்கி நடிக்கிறார். தமிழில் கே. ஆர். ராமசாமி நடித்த பாகத்தில் என். டி. ராமாராவும், வி. என். ஜானகி நடித்த பாகத்தில் ஜமுனாவும், எம். வி. ராஜம்மா நடித்த பாகத்தில் அஞ்சலிதேவியும் நடிக்கிறார்கள்.

★ ஆர். எஸ். மணியின் மேற்பார்வையில் தயாராகும் 'மாமன் மகள்' பெயர்மாற்றப் பிரச்னையை விட்டு விட்டதாகவும், அதே பெயரையே ஊர்ஜிதம் செய்துவிட்டதாகவும் தெரிகிறது. பிரதம பாகத்தில் ஜெமினி கணேசன், டி. எஸ். துரைராஜ், கே. எஸ். ராஜம் முதலியோர் நடிக்கின்றனர். கதை வசனம் ஸ்ரீதர்.

மிகப் பெரிய முகம் பார்க்கும் கண்ணாடி; அதன் முன்னே நின்று சாவித்திரி தன் அழகை சரி பார்க்கிறார். பின்னே முகமூடியுடன் ஜெமினி கணேசன் வருகிறார். (இனி என்ன நடக்குமோ ?) இந்தக் காட்சிதான் சமீபத்தில் படமாக்கப்பட்டது.

★ பக்கத்திலேயே கிருஷ்ணா பிக்சர்ஸ் மதுரைவீரனுக்காக அரண்மனை செட்டு ஒன்று போடப்பட்டு கம்பீரமாக தோற்றமளிக்கிறது. எம். ஜி. ஆர்., பானுமதி நடிக்கும் படம் இது. கண்ணதாசன் கதை, வசனம், பாட்டு, எழுத, யோகானந்த் டைரக்ட் செய்கிறார்.

★ கணேஷ் மூவிடோன் 'கோடீஸ்வரன்' சுந்தர் ராவ் நட்கர்னி டைரக்ஷனில் தயாராகிறது. பிரபல மராத்தி கதை ஒன்றைத் தழுவியதாம். எஸ். பாலசந்தர், சிவாஜி கணேசன், ஸ்ரீராம், பத்மினி, ராகினி, ருஷ்யேந்திர மணி, தங்கவேலு நடிக்கின்றனர்.

பையன், தான் காதலிக்கும் பெண்ணை நாடுகிறான். அவன் தந்தையோ வாழ்வின் ஜீவனான பணத்தை நாடுகிறார். பணம் உள்ளோரிடம் பையன் மனதிற்குப் பிடித்த பெண்ணில்லை. பெண் உள்ளவரிடம் பணமில்லை. ஒரு யோசனை செய்கிறான் பையன். காதல் ஈடேற தன் தந்தை பணத்தையே எப்படியோ எடுத்து பெண் வீட்டாரிடம் கொடுத்து விடுகிறான். அவன் விரும்பிய பெண், தந்தை விரும்பிய பணத்துடன் கிடைக்கிறது. இதன்மூலம் பண ஆசை பிடித்த தந்தை ஏமாற்றப்படுகிறார். இக்காட்சி சமீபத்தில் 'கோடீஸ்வரனுக்'காக படமாக்கப்பட்டது. தந்தையாக தங்கவேலும், பையனாக ஸ்ரீராமும் நடிக்கின்றனர்.

ரேவதி ஸ்டுடியோவில்

★ கள்வனின் காதலி படப்பிடிப்பு துரிதமாக நடைபெற்று வருகிறது. சாரங்கபாணி, பி. எஸ். ஞானம் சம்பந்தப்பட்ட காட்சி சமீபத்தில் படமாக்கப்பட்டது. கதை கல்கி எழுதியது. வசனத்தை எஸ். டி. சுந்தரம் எழுதியுள்ளார். இரண்டு பாடல்களை எம். எஸ். சுப்புலெட்சுமி பாடியிருக்கிறார். சிவாஜி கணேசன், பானுமதி நடிக்கும் படம் இது.

★ கண்டசாலாவின், பெயர் சூட்டப்படாத தெலுங்குப் படத்திற்காக ராஜம் சுலோசனாவின் நடனக்காட்சி ஒன்று படமாக்கப்பட்டது.

★ டி. ஆர். ஆர். புரொடக்ஷன்ஸ் 'கோமதியின் காதலன்' துரிதமாகத் தயாராகிறது. டி. ஆர். ராமச்சந்திரன், சாவித்திரி, தங்கவேலு, முத்துலெட்சுமி சம்பந்தப்பட்ட காட்சி படமாக்கப்பட்டது.

சியாமளா ஸ்டுடியோவில்

★ சியாமளா, நளினி கூட்டுத் தயாரிப்பான 'படித்த பெண்' திருவேங்கடம் டைரக்ஷனில் வளர்ந்து வருகிறது. மனோகர், நம்பியார், மாதுரிதேவி, ராஜம் சுலோசனா நடிக்கின்றனர். ஏ. எல். நாராயணன் வசனம் எழுதுகிறார். பாடல்கள் தஞ்சை ராமையாதாஸ்.

★ சியாமளாவில் சொந்தமாக ஒரு படம் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். அதில் சாவித்திரி, எம். ஜி. ராமச்சந்திரன் இருவரும் நடிப்பார்கள் எனத் தெரிகிறது.

◉

கண்ணதாசன் எழுதும் 'வில்லாளன்'

கல்பனா பிக்சர்ஸ் தயாரிக்கவிருக்கும் படத்திற்கு 'வில்லாளன்' எனப் பெயர் சூட்டியிருக்கிறார்கள். கண்ணதாசன் கதை, வசனம் எழுதி வருகிறார். வாஹினியில் படம் தயாராகவிருக்கிறது. டைரக்டராக அப்பாராவும், அசோஸியேட் டைரக்டராக நாராயணனும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், பாலையா, எஸ். வி. சுப்பையா, முஸ்தபா, என். எஸ். சுப்பையா, ஸ்ரீரஞ்சனி, எம். என். ராஜம் முதலானோர் நடிக்க ஏற்பாடாகியுள்ளது. பிரபல காமிராமென் சந்திருவின் தயாரிப்பான இப்படத்தின் ஒலிப்பதிவை ஜீவா ஏற்றுக் கொண்டுள்ளார்.

சிந்தாமணிக்குப்பதில் சமூகப்படம்

பரணி ஸ்டுடியோவின் சொந்தக்காரரும் பிரபல நடிகையுமான பானுமதி "சிந்தாமணி" என்ற புராணப் படத்தை தயாரிக்கவிருந்த திட்டம் கைவிடப்பட்டது. இதில் "பில்வமங்கலாக" நடிக்க சிவாஜி கணேசன் ஒப்பந்தமாகி யிருந்தார்.

இதற்கிடையில் தோழர் ஏ. கே. வேலன் எழுதிய ஒரு சமூகக் கதையை பானுமதி தயாரிப்பார். இதன் படப்பிடிப்பு அடுத்த வாரத்தில் ஆரம்பமாகும். இந்தப் படத்தை பானுமதியின் கணவரான ராமகிருஷ்ணா டைரக்ட் செய்வார்.

அலிபாபாவுக்கு 'முரசொலி' மாறன்

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்து வரும் 'அலிபாபா' கேவா கலர் படத்திற்கு முரசொலி மாறன், B.A. (Hons.) ஏ. எல். நாராயணன் ஆகியஇருவரும் வசனம் எழுதி வருகிறார்கள். பானுமதி, எம். ஜி. ஆர்., எம். என். ராஜம் முதலியோர் நடித்து வருகின்றனர்.

திருவிதாங்கூர் சகோதரிகளின் மேல்நாட்டுப் பயணம் ஒத்திவைப்பு

திருவிதாங்கூர் சகோதரிகளான லலிதா, பத்மினி, ராகினி ஆகியோர் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துகொண்ட படங்களின் வேலைகள் இன்னும் முடியாதிருப்பதால் இவ்வாண்டு ஜூன் மாதத்தில் செல்லவிருந்த ஐரோப்பிய நாட்டுச் சுற்றுப்பயணம் சில மாதங்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

கண்டனக் கூட்டம்

24-5-55 செவ்வாய் மாலை 6-மணிக்கு கோகலே மன்றத்தில் நடந்த சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அறிஞர் அண்ணா, திராவிடர் கழகத்தை தாடிக் கழகம் என்று கூறியதாக 26-5-55 தினத்தந்தி இதழில் வெளியிட்ட செய்தி உண்மைக்கும் புறம்பானதென்றும் அவதூறானதென்றும், தினத்தந்தி இதற்கு மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் தோழர் கே. ஏ. மதியழகன், அன்றே "நம்நாடு" இதழில் வெளியிட்ட மறுப்பறிக்கைக்கு இதுவரை தினத்தந்தியிடமிருந்து யாதொரு பதிலும் கிடைக்காததால் - தினத்தந்தியினுடைய இந்தப் போக்கினைக் கண்டித்து 4-5-55 சனிக்கிழமை மாலை வண்ணாரப்பேட்டை கல்லறை மைதானத்தில் நடைபெறும் பொது கூட்டத்தில் "டேப் ரிக்கார்டு" செய்யப்பட்டுள்ள அண்ணாவின் கோகலே மன்றப் பேச்சு ஒலிபரப்பப் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழர்,
இளம்பரிதி

தி.மு.க. சென்னை மாவட்

சிலம்பு வழங்கும்...

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

விளக்க அமைதி சின்னபின்னம் அடைந்திருப்பது உறுதி. ஏனெனில் இங்கே, வெளியுலகம் இன்னும் விளக்கமாக அறியாத - ஆனல் 'கதைகளி'ன்மூலம் ஒரு தும்பு வடிவில் உலக அரங்குக்கு எட்டியுள்ள- நான்காவது நாடக மரபு ஒன்று கொன்று தொட்டு இன்றுவரை இயங்கி வருகிறது என்பதைக் காண லர்.

இதுவே தமிழ்-மலையாள நாடக மரபு. மறைந்த பண்டைத்தமிழ் நாடக மரபின் தமிழகக்கிளை பட்டு விட்டதாயினும், பட்டழியாத கிளையாக மலையாள நாடக மரபு 2000-ம் ஆண்டுகளுக்கு மேலாக அணையா விளக்காக நிலவுகின்றது. அடிக்கடி அணையவேண்டிய நிலையில் புயலில் சிக்கியும் வலிகுன்றி வாடினும் பட்டுவிடாமல் அது நம் காலம் வரை தொடர்ந்து வந்து நமக்கு எட்டியுள்ளது.

மீட்டும் புதிய புதிர்

இந்த மலையாள மரபில் ஒரு **தனித் தன்மையுண்டு.** அதில் **சாக்கியர் கூத்து (தமிழ் சாக்கையர் கூத்து), ஒட்டம் துள்ளல் என்ற இருவேறு வகைப்பட்ட நாடகக்கலை வகைகள் தனித்தனி வேறு வேருக நின்று நிலவி வருகின்றன.** கூர்ந்து நோக்கினுல் எல்லா வகைகளிலும் சாக்கியர் கூத்து கிரேக்க துன்பியல் நாடகத்தையும், ஒட்டக் துள்ளல் கிரேக்க இன்பியல் நாடகத்தையும் ஒத்திருப்பவை ஆகும்.

ஆங்கில மரபும் சமஸ்கிருத மரபும இயற்கை மரபுகள் என்றனர் உலக அறிஞர். இடையே கிரேக்க மரபு செயற்கை மரபாக எழுந்தது என்று அவர்கள் கூறி அமைத்தனர். இப்போலி விளக்க அமைதியைக் கேலி செய்கிறது, புதிதாக நலம் காணும் இப்பழைய தென்னட்டு மரபு! ஏனென்றல் கால இடம் கடந்த காரணத்தால் ஆங்கில சமஸ்கிருத மரபுகள் இயற்கை உலக மரபுகளானுல், அதுபோல கால இடம் கடந்த காரணத்தால் கிரேக்க தென்னட்டு மரபுகளும் இயற்கை உலக மரபுகளே என்று ஏற்படுகிறது.

இது மட்டுமன்று உலகின் மற்றொரு கோடியில் சீன, ஜப்பானிய நாடக மரபுகள் உள்ளன. இன்னும் வேறொரு கோடியில் ஜாவா, மலாயா, இலங்கை முதலிய தென்கிழக்காசிய நாடகமரபுகள் உள்ளன. இவை கிரேக்க-தென்னட்டு மரபுடனும் தொடர்புடையவையாய், ஆங்கில-சமஸ்கிருத மரபுடனும் தொடர்புடையவையாய், இரண்டையும் முற்றிலும் ஒவ்வாது ஒரு சார் ஒத்து இயங்குகின்றன. ஆகவே உலக முழுதும் நாடகமரபு அடிப்படையில் ஒன்றே என்றும், அவற்றின் வேறுபாடுகள் வளர்ச்சி வேறுபாடுகள், சூழல் வேறுபாடுகளால் ஏற்பட்டவையே என்றும் விளங்குகிறது.

அப்படியானல் காலமும் இடமும் கடந்து 16ம் நூற்ருண்டுக் கால இங்கிலாந்து மரபும் ஒன்றுபடுவானேன்? மற்றொரு புறம் கி. மு. 6ம் நூற்ருண்டுக்குரிய கிரேக்க மரபும் கிட்டத்தட்ட அதே காலத்திலிருந்து கி. பி. 18ம் நூற்ருண்டு கடந்து இன்றுவரை நிலவும் தமிழ்-மலையாள மரபும் ஒன்றுபடுவானேன்?

இது நாடகக் கலையுலகின் ஒரு பெரும் புதிராகும்.

ஓர் உலகம்:

ஒரே உலக மரபு

உலக நாடக இலக்கிய மரபையும் ஒரேமரபாகக் கொண்டு அதன் வளர்ச்சியை ஆராய்ந்தால், இந்தப் புதிருக்கு விளக்கம் காணலாம். இம்முயற்சி உலகப் புதிர் ஒன்றை விளக்குவது மட்டுமல்ல, சிலப்பதிகார கால தமிழ் நாடகப் பண்பையும் நன்கு படம் பிடித்துக் காட்டுவதாகும். வேறு வேறு திசையில் உலகில் வளர்ந்த நாடகப் பண்புகளெல்லாம் சிலப்பதிகாரத் தமிழ் நாடக மரபிலிருந்து கிளைத்த பல்வேறு கிளை மரபுகளே யாகும் என்பது அப்போது விளங்கும். அத்தமிழ் மரபு இருவேறு வகைப்பட்ட ஆங்கில-சமஸ்கிருத மரபையும் கிரேக்க-மலையாள மரபையும் விளக்குவதுடன், சீன - ஜப்பான், இலங்கை, மலாயா, ஜாவா மரபுகளுக்கும் நல்ல தெளிவு தரக்கூடும்.

(தொடரும்)

மாபெரும்

பொதுக்கூட்டம்

சென்னை வண்ணரைப்பேட்டை கல்லறை மைதானத்தில்

4-6-55 சனி மாலை 6-மணிக்கு

தோழர்

த. சேதுராசன்

தலைமையில்

தோழர்கள்

சி. பி. சிற்றரசு,

என். வி. நடராசன்,

விருதை

ந. இராமசாமி

முதலியோர் பேசுவர்

க்கிய அறிவிப்பு

-55 அன்று கோகலே த்தில் ஒலிப்பதிவு செய் அண்ணு அவர்களின் பொழிவு ஒலிபரப்பப்படும்.

— 3-வது வட்டம்

செல்வம் – சுலேச்சன

29-5-55 காலை 9-மணிக்கு ஈடு பெரியார் நகர் மன்றத்தில், காலஞ்சென்ற ஈரோ திரு. ஈ. வெ. கிருட்டிணசாமி அவர்களின் புதன் ஈ. வெ. கி. செல்வராஜுக்கும், ஆனைமலை திரு. என். சாமப்பனர் அவர்களின் புதல்வி சுலோனவுக்கும் திருச்சி தெ. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் நடைபெற்றது. ரியார் ராமசாமி அவர்கள் மணமன்றத்தில் நல்லதே சொற்பொழிவும் நன்றியுரையும் நிகழ்த்தினர்கள். டிவில் மணமகன் செல்வராஜு வந்திருந்தோருக்கும் நந்தி, கடிதங்கள் மூலம் வாழ்த்தனுப்பியோருக்கும் றி தெரிவித்தார். தோழர் கஜேந்திரன் மணமக்களை ழ்த்தி வந்திருந்த தந்தி, கடிதங்களைப் படித்தார். நமணத்திற்கு வந்திருந்து மணமக்களை வாழ்த்தியோர்:- என். வி. நடராசன், கோவை ஜில்லா பேடு தலைவர் பழைய கோட்டை பட்டக்காரர், எம். சிக்கையா, ஈரோடு சேர்மன் மீனட்சிசுந்தர முதலியார், வை சேர்மன் ஈ. எம். அண்ணமலை, பி. ஏ., பி.எல்; ஈரோடு மகாஜனக் கல்லூரி பிரின்சிபால் ஜி. டி. ராஜேஸ்வரன் தம்பதிகள், கோவை செழியன், புலியூர் பெருமள் நாடார், கிட்டு, ராஜமாணிக்கம், கரூர் முனிசிபல் வுன்சிலர் குழந்தைவேலு, என். பி. காளியப்பன். ரோடு ப. சண்முகவேலாயுதம், என். இ. பாலகுரு, லம் பி. ரத்தினசாமி பிள்ளை, எம்.எல்.ஏ., ஏ. வி. நாராயணசாமி நாயக்கர், தாதம்பட்டி ராஜு, நீடாமங்கலம் ஆறுமுகம், சேலம் ஜெகதீஸ் செட்டியார், சேலம் கவுன்சிலர் எம். வீ சொக்கலிங்கம், பகுத்தறிவு ஆசிரியர் கண்ணன், சேலம் பத்மநாபன் ('தென்றல்'-'தீலா நிலையம்' சார்பாக வெள்ளிக்கோப்பை அளித்தார்) ஆனைமலை நரசிம்மன், சேலம் வி. சிவப்பிரகாசம், சேலம் ராஜாராம், வேலூர் திருநாவுக்கரசு, தாதம்பட்டி ப்புசாமி, சேலம் ஏ. சித்தையன். ஜி. சாமி நாயுடு, ஏ., பி.எல்.

தந்தி, கடிதங்கள்மூலம் வாழ் து அனுப்பியோர்- திருமதி ஜி. டி. நாயுடு கோயமுத் ர், வி. வி. ராமசாமி எம்.எல்.சி', ஈ. எல். ராகவ மு நலியார் எம்.எல்.ஏ., ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., வீராசாமி, எம்.பி. பே. பி. கந்தசாமி, எம்.பி, தில்லை ல்லாளன, செழியன், நெடுஞ்செழியன், பம்பாய் அன்பழ ன், தொல்காப்பியன், பி. எம். ஸ்ரீராமுலு, டி. பி. எஸ். பொன்னப்பா காஞ்சி, கலைஞர் மு. கருணநிதி, எஸ்.எஸ். ராசேந்திரன், சேலம் பச்சமுத்து, ராஜமாணிக்கம் திரு நப்பத்தூர், குன்னூர் ஒளியழகன், சண்முகநாதன் மேட் டுப்பாளையம், திருநெல் வேலி தியாகராசன், மாணிக்க உ டையார், செங்கல்பட்டு டாக்டர் சரோஜினி, நாகராசன் ட்டி சம்மந்தம், ராசி வனம் துரையரசன், பட்டுக்கோ ட்டை சி. என். சிவ நாதன், எஸ். எஸ். பி. லிங்கம் சென்னை, காஞ்சிபுரம் முனிசிபல் கவுன்சிலர் ராஜகோபா , திருப்பத்தூர் டி.கே. கோவிந்தசாமி, வேலூர் சுந்தர மூர்த்தி, பி ஏ., திருச்சி பிரான்சிஸ், ஏ. சேனுபதி, எம்.எ .ஏ., எஸ். குருசாமி, குஞ்சிதம் குருசாமி.

ஜவகர் கூறும் 'சக் நராயுதங்க'!

"இந்தியாவை இனி எவரு ம் தாக்குவார்க என் பயம் எனக்கு இல்லை;

"இந்தியா ஒரு பெரிய ா ணுவ பலமிச் நாடா விளங்கவேண்டுமென்பது அல் என் விருப்ப இந் யாவின் மீது தாக்குதல் ஏற் டால், எது ரிடி அடிபணியாது, தடிகளாலுப் கற்களாலும் எதிர்த் தன்னைக் காத்துக்கொள்ள வலிமை படைத்த இந்தியா விளங்கவேண்டுமெ த என் விருப்பம். இ உணர்ச்சி இன்று இந்தி வங்கணும் ஏற்ப விட்டது."

ம், புதுடில்லி, மே 3

வெண்பாப் போட்டி

8 நாதத்தில் இல்லை நயம்!

வெண்பாப்போட்டி 8-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

கண்ணும் மனமுங் கருத்துங் கவர்ந்தின்
றெண்ணாத லின்பத்தை யீந்துவக்கும்—வண்ணமயில்
மாதரை மாயமெனும் மாண்பில் மதப்பேயர்
நாதத்தில் இல்லை நயம்!

—வெ, சந்த், பழைய ஆயக்குடி.

★

கன்னல் தமிழிருக்கக் காதுணரா இந்தியினை
இன்னல் விளைத்திடவே ஏற்றுகின்றார்—தன்மையின்றி
சாதிக்கின் றாரிங்கு சக்தியினால்; இந்தியதன்
நாதத்தில் இல்லை நயம்!

—வெண்ணெய்வேலன், திருவெண்ணெய் நல்லூர்.

★

நாதியில் லாஏழை நீதியில் லாசெல்வர்
சாதிகள் ஏராளம் சூழ்ந்துள்ள—மேதினியில்
பேதங்கள் போம்வரை ஒன்றே குலமென்னும்
நாதத்தில் இல்லை நயம்!

—மதர்மம், பாளையம்பட்டி.

★

முத்தொளிர் பற்கள் முறுவல் இடைமின்ன
அத்தானென் றென்னை அழைப்பாளின்—புத்தமுதக்
காதல் இசையைப்போல் கற்றோர் புகழ்வீணை
நாதத்தில் இல்லை நயம்!

—எம். எஸ். மணி, திருக்கழுக்குன்றம்.

★

கூவும் குயிலிசையும் யாழும் குயிலிசையும்
மேவும் இசையெல்லாம் இன்னிசையோ?—யாவினுமே
மாதவத்து மென்மழலை இன்சொல்போல் மற்றுள்ள
நாதத்தில் இல்லை நயம்!

—எஸ். அச்சுதன், பாலையம்பட்டி.

★

ஆட லரங்கின் அழகுத் திருவுருவம்
ஊடற் குயர்ந்த உறுதலையாள்—தேடரிய
பாதத்தில் அன்றிகுழற் பண்ணமைந்த யாழ்வீணை
நாதத்தில் இல்லை நயம்!

—வித்துவான். சி. இரத்தினவேலனார், சென்னை.

★

வேற்றுமொழி மோகத்தால் வீணை வேதனைகள்
ஏற்றழியும் இன்தமிழா! ஏசாரோ?—சாற்றவொணா
மோத மளிப்பதுன் முத்தமிழே! வேறுமொழி
நாதத்தில் இல்லை நயம்!

இரா. சண்முகம், பண்ணைக்காடு.

★

காலை மலர்ந்ததுவே கன்[illegible]த் தமிழ்வல்லோர்
ஓலை எடுத்திட்டார் ஆண[illegible]தன்—மேலேறி
சாதமிசைத் தற்கேட்ட [illegible]மிழர்க் குப்பிற
நாதத்தில் இல்லை நயம்!

—து. பெரியசாமி, திருமங்கலம்.

கல்வியைக் கற்றோர்தான் [illegible]விதம் நிற்கவில்லை
கலவினையை வெல்லுதற் [illegible]வென்மையில்லை—செல்வியே
நாதத்தில் வம்பளக்கும் [illegible]டயார் வாழ்வென்னும்
[illegible]தத்தில் இல்லை நயம்!

—ந. பிச்சைமுத்து, பாகனேரி.

தத்தித் தவழ்ந்து தளிர்க்கால் நடைபயில
'அத்தத்தா' வென்னும் அருஞ்சேயின்—தித்திக்கும்
சீதளச்செவ் வாயூறும் தேன்மழலை போல்,குழலின்
நாதத்தில் இல்லை நயம்!

—எஸ். சரசுவதி, திருக்கழுக்குன்றம்.

★

தெய்வக் கதையென்று தீந்தமிழாம் தேன்கூட்டி
பொய்யோடு ஆரியத்தைப் போதித்து—செய்யாத
பேதம் பலவகுத்துப் பேர்பெறுகம் பன்கவிதை
நாதத்தில் இல்லை நயம்!

—வித்துவான், இல. அரவரசன், இராமநாதபுரம்.

★

ஆறில்லா ஊருக் கழகில்லை; அஞ்சினவள்
கூரியகை வாளால் குணமில்லை—சீராரும்
போதத்தில் ஓங்கிப் பொருளுணர்ந்து பாடாதான்
நாதத்தில் இல்லை நயம்!

—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

★

கன்னல் சுவைமிஞ்சும் கன்னித் தமிழிசைக்
கின்னல் இழைக்கவந்த எவ்விசையும் - எண்ணுங்கால்
நாதத்தில் நம்மிசையே நல்லிசையாம் மாற்றிசையின்
நாதத்தில் இல்லை நயம்!

—பா. அ. சு. குணசீலன், பாலையம்பட்டி.

★

மழலைச்சொல் மைந்தரிலார் மன்னிய தென்பார்
குழலிசையை யாழொலியை கண்ணே!—பிழையுண்டோ
ஓதிட்ட முதுமொழியில்? ஒப்பிலா மழலையினும்
நாதத்தில் இல்லை நயம்!

—இரத்தின. மனோகரன், கோலார் தங்கவயல்.

★

பாரதி தாசனின் பாட்டினைப் பண்கூட்டி
யாரறிந்து பாடினும் யாழொக்கும்—ஆரமுதே!
வேதமெனப் பாடும்பண் வேண்டற்க, அக்கருத்தின்
நாதத்தில் இல்லை நயம்!

—வீ. பாலசுந்தரம், அருப்புக்கோட்டை.

★

மக்கட்பேற் றின்சிறப்பை மாநிலத்தோர் கற்றதற்பின்
குக்கல்போல் மக்கள் குரைத்தாலும்—அக்குரல்தான்
கீதத்தில் மேலென்பர்; கேள்;மழலை முன்மற்ற
நாதத்தில் இல்லை நயம்!

கோ. நம்மாழ்வார், இளங்காடு.

★

இன்சொல் உளவாக இன்னாது கூறுவது
நன்றல்ல வென்றே நவின்றிட்டார்—பின்னுமேன்
வாதமிடும் மக்கள் எழுப்புகின்ற வாய்மொழியின்
நாதத்தில் இல்லை நயம்!

—சபா. பரமசிவம், ஆடுதுறை.

★

நண்பா!நான் பேசும் படத்தில் நடிக்க
எண்ணி அதற்குநன்கு ஏற்றவரைக்—கண்டுகின்றேன்
ஆதரவு காட்டா(து) அவர்சொன்னார் இவ்விதம்;"உன்
நாதத்தில் இல்லை நயம்!"

—மு முனியப்பன், மதுரை.

★

நாட்டைச் சுரண்டுகிறார் நல்வாழ்வு இல்லாமல்
பாட்டாளி மாய்கின்றார் பட்டினியால்;—கேட்டாலே?
சாதலும் வாழ்தலும் சாமிசெயல் லென்பாரக்
நாதத்தில் இல்லை நயம்!

—லி. வி. எஸ். டெய்லர், பாளையம்[illegible]

★

நாவலராம் நல்ல நெடுஞ்செழியன் நம்புரட்சிப்
பாவலரின் பாக்களைப் பாடுதலைப்—பாவாய்!நான்
மாதக் கணக்கில் மனதிலெண்ண வீணையின்
நாதத்தில் இல்லை நயம்!

—மு. [illegible]

◉ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்[illegible]

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார், எம்.ஏ.,எல்.டி.

பதில் தருகிறார்

அழகர் பி. ஏ., சென்னை 1.

1. பட்டினப்பாலை என்னும் நூலின் பாட்டுடைத் தலைவனாகக் கூறப்படும் திருமாவளவன்தானா கரிகாற் பெருவளவனா? அப்படி கரிகாலனே திருமாவளவனா என்றால் போதிய சான்று கூறி விளக்கவும்.

2. இந்திரன் தமிழ்க் கடவுளா? சிலப்பதிகாரத்தில் வரும் இந்திர விழா தமிழர் பண்பாடு பொருந்திய விழாவா? தெளிவான விளக்கம் தர வேண்டுகிறேன்.

பட்டினப்பாலையிலும் ஏனைய சங்க இலக்கியப் பாடல்களிலும் வரும் கரிகால் பெருவளவன் செயலாக நாம் அறிவதெல்லாம் வெண்ணிப்போர் வெற்றி ஒன்றே. வரலாற்றிலும் மரபிலும் சிலப்பதிகார காலமுதல் இன்றுவரை எத்தனையோ அருஞ்செயல்களுக்கு உரியவனாக விளங்கும் கரிகாலன் அவன்தான் என்று கருத முடியவில்லை. அதே சமயம் சங்க காலக் கரிகாலன்தான் உண்டு. மற்ற கரிகாலன் இடைக்காலக் கற்பனையே என்று பல வரலாற்று ஆசிரியர் கொள்வதும் முழுதும் பொருத்தமாகத் தோன்றவில்லை மேருவைச் சென்டால் அடித்தது. சிலப்பதிகாரத்திலும், காவிரிக்குக் கரை கட்டியது இலங்கை வரலாற்றிலும், பல வடதிசை மன்னர் கல்வெட்டுக்களிலும், காடுவெட்டி தொண்டை நாட்டின் வேளாண்மை வளர்த்தது மரபுரைகளிலும் நீடித்துக் காணப்பட்டுள்ளன. ஆகவே, வரலாற்றுப் புகழ்பெற்ற கரிகாலன் அல்லது திருமாவளவன் சங்க காலத்துக் கரிகாலனுக்கு முற்பட்டு வாழ்ந்த அதாவது சங்க காலத்துக்கு முற்பட்ட ஒரு பேரரசன் என்று மட்டுமே தற்போது ஊகிக்க முடியும்.

2. வேந்தன் என்ற பெயரால் இந்திரன் தொல்காப்பியத்தில் மருத நிலத் தெய்வமாகக் குறிக்கப்படுகிறான். தொல்காப்பியர் காலத்துக்குள்ளாகவே ஆரிய தெய்வமாகிய இந்திரன் தமிழர்களிடையே வணங்கப்பட்டான் என்று ஆரிய அறிஞர்கள் கூறுகின்றனர். இது பொருத்த[...]றது. ஆரியர்களுக்குத் திணை[...]க்கமும் இடையாது. திணைத்[...]வங்களும் இல்லை. தமிழர் [...]ந்தெய்வங்கள் தமிழ்ப் பண் [...] கருவிலிருந்து ஊறி[...]ந்தவை. அவை ஆரியரிட[...] தரப்பட்டவை ஆகமாட்டா. [...]ன் என்ற பெயர் ஆரியத் [...]ன் பெயராய் இருக்கலா[...] வேந்தன் என்ற தெய் [...]ன்றுபடுத்தப் [...]லாம். [...]ல்லை

இனிமை திறம் ஆகிய தமிழ் வேர்ச்சொற்களிலிருந்து தோன்றிய தமிழ்ப் பெயர் என்று கொள்ள இடமுண்டு. அத்துடன் ஆரியர் இந்திரன் என்ற தெய்வத்தை பஞ்சாபுக்கு வந்த பின்னரே, அவ்விடத்துப் பழங்குடி மக்களிடமிருந்து மேற்கொண்டனர் என்று அறிகிறோம். ஆகவே இந்திரன் ஆரியத்தெய்வம் என்பதைவிட தமிழினத் தெய்வம் என்று கொள்வதே வரலாற்று முறையில் பொருத்தமுடையது.

இந்திரன் அரசன். நாடும் நகரும் அரசுமுடைய தமிழினத்தோருக்கே அவ்வழிபாடு. விழாப் பொருத்தம் ஆரியர் கி.மு.7-ம் நூற்றாண்டில்கூட நிலையான குடிவாழ்க்கை, நாடு நகர் வாழ்க்கை அற்றவராகவே இருந்தனர்.

முத்தமிழ்ப்பித்தன், நாணாக்கிணறு.

இமயத்தின் உச்சி கண்டவர் "எவரெஸ்ட் வீரர் டென்சிங்" என இன்று பேசப்படுகிறது. ஆனால் பண்டையத் தமிழரசன் ஒருவன் இமயத்தில் விற்கொடி நாட்டினான் ("ஓங்கிய, வரையளந்து அறியாப் பொன்படு நெடுங்கோட்டு, இமயம் சூட்டிய ஏமவிற்பொறி, மாண்வினை நெடுந்தேர் வானவன்") என்று புறநானூறு பேசுகின்றதே! அப்படியானால் டென்சிங்கை எவரெஸ்ட் வீரரென்பது எப்படிப் பொருந்தும்?

அமெரிக்காவை அணிமைக் காலத்தில் புதிதாகக் கண்டவர் கொலம்பஸ். அவரே முதல் முதல் அந்நிலங் கண்டவரென்று பொதுவாகக் கருதப்படுகிறது. இது முழுதும் தவறுமல்ல; ஏனென்றால் அவர் காட்சியைத் தொடர்ந்து குடியேற்றமும் புது நாகரிகமும் இன்று வரை தொடர்ந்துள்ளது. ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே டேனியர் அமெரிக்காவில் இயங்கியதுண்டு என்று வரலாறு குறிக்கிறது. ஆயினும் இது வளமும் பயனும் இல்லாத செய்தி. இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆசிய நாகரிகங்களுக்கும் பண்டைய அமெரிக்காவிலுள்ள மய நாகரிகங்களுக்கும் இனத் தொடர்பு இருந்தன. பழம் பொருள் ஆராய்ச்சியாளர் குறிக்கின்றனர். இப்பழந் தொடர்புகள் புதுத் தொடர்பின் மதிப்பைக் குறைக்கவில்லை. அதுபோலவே இமயத்தில் தமிழ் மன்னர் புலி, வில், கயல் பொறித்த செயல் தேன்சிங்கின் வெற்றிப் புகழைச் சிறிதும் குறைக்காது.

தமிழ்மன்னர் இமயத்தில் கொடி நாட்டிய செயல்கள் கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளாக கி. பி. 2-ம் நூற்றாண்டு வரை நிகழ்ந்தன. இதற்கு மொழி [...]யில் ஒரு சான்று கூறலாம். இமயமலையைப் பற்றிய அறிவு தமிழரிடையே சங்க காலத்தில் தெளிவாக காணப்படுகிறது. சங்க காலத்துக்குப் பிற்பட்டு கி. பி. 4-ம் நூற்றாண்டு முதல் காளிதாசன் முதலிய சமஸ்கிருத கவிஞர்களிடமும் தெளிவாகக் காணப்படுகிறது. ஆனால், தமிழர் அறிவு பரவாத புராணகாலங்களில் இமயத்தைப் பற்றிய மெய்யறிவு சிறிதும் இருந்ததில்லை. கற்பனையான மேருமலை பற்றிய குறிப்பே பெரிதும் காணப்படுகிறது. இமயம் விந்தியத்தைப்போல ஏகுட்டிமலை என்றே புராணங்கள் கூறுகின்றன.

இமயம் வடநாட்டில் இருந்தாலும் அதைப் பற்றிய அறிவு வடநாட்டாருக்குத் தமிழகத்திலிருந்தே பரவிற்று என்பதை இது காட்டுகிறது. தமிழர் இமயவெற்றி, போர் வெற்றிகள் மட்டுமல்ல நில நூல் பற்றிய வடவர் அறியாமை அகற்றிய நிலநூல் வெற்றியாகவும் அமைந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

சு. சீ. கலியாசன், சிறுதையூர்.

1. திருவள்ளுவர் என்பது என்ன பொருள்?

2. கம்பர் இயற்றிய இராமாயணம் வேறு என்றும் வால்மீகி இயற்றிய இராமாயணம் வேறு என்றும் அந்த ராமன் வேறு இந்த ராமன் வேறு என்று ஒன்னுடைய சமூகஅறிவு நூல் ஆசிரியர் சொல்லுகிறார். நான் இரண்டும் ஒன்று தான் என்று வாதாடினேன். அவர் இல்லை என்கிறார். இதில் யார் சொல்வது சரி?

1. திருவள்ளுவர் என்பது இயற்பெயரோ அல்லது சிறப்புப் பெயரோ எதுவென்று இப்பொழுது திட்டமாகக் கூறமுடியவில்லை: அது தமிழ்ப்பெயர் என்று மட்டும் உறுதியாகக் கூறலாம். திரு-சிறப்புப் பற்றிய அடைமொழி. வள்ளுவர் - வண்மையை உடையவர் அதாவது அறிவு வளம் உடையவர் என்று பொருள்படும். இப்பெயர் சிறப்புப் பெயராக அமைந்திருப்பது பொருத்தமானது.

வள்ளுவர் ஒரு குடிப்பெயர் என்பது மரபு. இன்று அது ஒரு சாதிப் பெயராகவும் விளங்குகிறது. இன்றைய பல சாதிப் பெயர்கள் பழைய குடிப்பெயர்களே ஆகும், வள்ளுவர் குடி என்பது மன்னருக்குமுன் சென்று பறைசாற்றி விளம்பரம் அறிவிக்கும் உயர்பணியாளர் என்று பெருங்கதை முதலிய நூல்கள் குறிக்கின்றன. இன்று ஆரியத்தால் தாழ்த்தப்பட்ட வள்ளுவர் வகுப்பு அன்று தமிழரிடையே உயர்வு பெற்றிருந்த ஒரு வகுப்பு என்பது பொருத்தமற்றதன்று. இது போன்றே பல தமிழர் குடிகள் இன்று தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ளன. புலவர்களிடையே மன்னருடன் சரிசமமாகப் பழகிய பாணர், விறலியர், வகுப்பே இன்று கோவிலுக்கு அடிமை செய்யும் இசை வேளாளர் வகுப்பாக உள்ளது.

திருவள்ளுவர் குடிப்பெயரால் தனிச் சிறப்புப் பெற்ற பெயராய் இருக்கவேண்டும். வள்ளுவர் குடியைத் தாழ்த்திய ஆரியம் வள்ளுவரையும் தாழ்த்த ஆதிபகவன் கதை கட்டிவிட்டது. அதில் இம்மியளவும் உண்மையில்லை. ஏனெனில் எல்லாப் புலவர் கதைகளும் அப்படியே.

2 கம்பர் இயற்றிய இராமாயணம் தமிழ் இராமாயணம் அது தமிழ்நூல். வால்மீகி இயற்றிய இராமாயணம் வடமொழி நூல் இரண்டு நூல்களும். வேறு வேறு தான் கதைப் பகுதிகளும் பண்[...] களுங்கூட பெரிதும் மாறுபட்டுள்ளன.

இரண்டு இராமாயணமும் ஒ[...] இராமன் கதையைத்தான் கூ[...]கின்றன. ஆனால் இரண்டும் கால[...]தால் ஆயிரம் ஆண்டுகள் முன்பி[...] ஆனது. கால வேறுபாட்டால் கவி[...] பண்பும் மாறியதுபோலவே, இ[...] மன் பண்பும் குணமும் இரண்டி[...]லும் மலை மடு அளவில் மாறுபட்[...] ளன. வால்மீகி இராமனை மன[...]னாகவே கற்பனை செய்துள்ள[...] கம்பன் கடவுள் அவதாரமா[...] மனிதனாக இராமனைக் கற்ப[...] செய்திருக்கிறார். இது மிகப் பெ[...] வேற்றுமை. தவிர வால்மீகி இ[...]மனை ஒழுக்கத்தில் சிறந்தவ[...] குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அ[...] அறிந்த ஒழுக்கம் ஆரியர் ஒழுக்க[...] இதை தமிழர் என்றும் ஒழு[...]மாகக் கொண்டதில்லை. வால்[...] இராமாயணத்தைத் தமிழர் இன்[...] வாசித்தால் பல பகுதிகள் அ[...] களுக்கு அருவருப்பாக இருக்[...] வால்மீகியின் இராமன் தமி[...] கண்களுக்கு வீரனாகத் தோ[...] மாட்டான். கோழையாகத் தோன்[...] வான். நீதிமானாகத் தோ[...] மாட்டான். நயவஞ்சகன[...] தோன்றுவான். கம்பர் ச[...] மட்டும் தமிழர் கண்களில் இரா[...] உயர்த்தப் பாடுபட்டு ஒரு [...] இராமனைப் படைத்துள்ள[...] ஆகவே, வால்மீகியின் இராம[...] கம்பரின் இராமனும் கதையள[...] ஒருவராயினும் தன்மைய[...] பண்பாலும் முற்றிலும் [...] வேறு ஆவர்.

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 10

ஈற்றடி: "தென்றலே [...]யன்வந்தாய் செப்[...]"

முடிவு தே[...] [...]8-6-55

நீதிபதி: 'சகி'

[...]ன்றல்' சென்னை-6.